# ஆவியின் கனி

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

### கட்டுரை - 9



# ஆவியின் கனி

***"ஆவியின் கனியோ, அன்பு..." - கலாத்தியர் 5:22***

ஒரு காலத்தில் "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 1:2). இந்தப் பரந்து விரிந்த உலகில், எதுவும் இல்லாதிருந்தது; வெறுமையாயும், இருள் சூழ்ந்ததாயும் காணப்பட்டது. "Void/வெறுமை" எனும் இவ்வசனத்திலுள்ள வார்த்தைக்கு எபிரெய அகராதியானது, இருண்ட, உயிரற்ற, செயலற்ற என்ற அர்த்தங்களைத் தெரிவிக்கின்றது.

பின்னர் நாம், "*நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது*" என்று வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 1:2; திருவிவிலியம்). தேவ ஆவியானது செயல்படத் துவங்கினவுடன், பிரம்மாண்டமான விஷயங்கள் நடைபெறத் துவங்கினது; சொல்லர்த்தமாகவே பூமியை அசையவைக்கும் நிகழ்வுகள் அரங்கேறினது. இருள் மறைந்தது; வெளிச்சம் உண்டானது. இரவு, பகல் என்ற பிரிவினை உண்டானது. முன்பில்லாத ஆகாய விரிவு உண்டானது. கடலும், வெட்டாந்தரையும் உண்டானது. சகல வகையான மற்றும் சகல தோற்றங்களிலுமுள்ள தாவரங்கள் முளைத்தெழும்பி, வளர்ந்து செழித்தோங்கினது. சமுத்திரத்தில் மிகப்பெரிய திமிங்கிலங்களும், வலிய மீன்களும் அடங்கிய ஜீவராசிகள் உருவாகினது. நிலப்பகுதிகளில் மற்றச் சகலவிதமான ஜீவராசிகளும் உருவாகினது. இந்த மகத்தான காரியங்கள் அனைத்தும் தேவ ஆவி அசைவாடினதின் நிமித்தம் உண்டானது; மேலும் ஆவியின் இந்த வல்லமைக்குறித்தே, "*நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்*" என்று தாவீது தெரிவித்துள்ளார். (சங்கீதம் 104:30)

தேவனுடைய பரிசுத்த ஆவி என்பது, அவருடைய சித்தத்தைச் செயல்முறைப்படுத்தும் அவருடைய வல்லமையாக,

அவருடைய ஆற்றலாக, அவருடைய சக்தியாக, அவருடைய பராக்கிரமமாகக் காணப்படுகின்றது. அதை யாராலும் எதிர்த்துத் தடுக்கமுடியாது. பரிசுத்த ஆவியின் செயல்பாடுகள்/கிரியைகள் தெளிவாய் வெளிப்படும். தேவன் விரும்புவது எதுவோ, அதை அந்த ஆவியானது துல்லியமாக நிறைவேற்றுகின்றது. அந்த ஆவி பலன்களைக் கொண்டுவருகின்றது. அது கனியினைக் கொணர்கின்றது.

கடந்த காலங்களில் தேவ ஆவியின் வியத்தகு வல்லமை வெளிப்பட்ட சம்பவங்கள் சிலவற்றை இப்பொழுது நாம் பார்க்கலாம்.

எகிப்தில் காணப்பட்ட **யோசேப்பின்மீது** தேவனுடைய ஆவி வந்தது; செழிப்புள்ள ஏழு வருடங்களைக்குறித்தும், பஞ்சமுள்ள ஏழு வருடங்களைக்குறித்தும் பார்வோனுக்கு வந்த சொப்பனத்திற்குரிய அர்த்தத்தினை யோசேப்பு விவரித்தார். "***அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான்***" (ஆதியாகமம் 41:38). பின்னர் விரைவாக, சிறைச்சாலை கிடங்கில் அடிமையாகக் காணப்பட்ட யோசேப்பு, எகிப்தின் அதிகாரியாக உயர்த்தப்பட்டார்.

மீதியான் தேசத்தில் எளிமையான மேய்ப்பனாகக் காணப்பட்ட **மோசேயின்மீது** தேவ ஆவி வந்தது. சகல புருஷரிலும் சாந்தமுள்ளவரும், பயத்தினிமித்தம் எகிப்திலிருந்து தப்பி ஓடினவருமான மோசே, தைரியமாய் மீண்டும் எகிப்துக்குத் திரும்பினார்; வல்லமையுள்ள பார்வோனை முகமுகமாய் எதிர்த்தார்; எகிப்தின்மீது பத்து பயங்கரமான வாதைகளைக் கொண்டுவருவதில் தேவனுடைய கருவியாகச் செயல்பட்டார்; ஆயிரக்கணக்கான இஸ்ரயேலர்களை வழிநடத்துபவராக மாறினார்; ஜனங்களை எகிப்திலிருந்து வெற்றிகரமாக வெளியே அழைத்துச்சென்றார்; மலையில் வைத்து தேவனிடமிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டு, ஜனங்களுக்குக்

கொடுத்தார்; ஆசரிப்புக்கூடார பலிகளை நிறுவினார்; இறுதியில் இஸ்ரயேல் சேனையை, கானானின் எல்லைகளுக்குக் கொண்டுவந்து சேர்த்தார். இவைகள் அனைத்தும் தேவ ஆவி அவர்மேல் வந்ததினால் சம்பவித்தது.

ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்கும், அதன் தட்டு முட்டுகளை வடிவமைப்பதற்கும், தேவன் சொல்லிய விவரங்களின்படி துல்லியமாகச் செய்வதற்குமான வேளை வந்தபோது, இதைச் செய்வதற்குத் திறமையுள்ளவர்கள் இஸ்ரயேலரில் ஒருவருமில்லை. அவர்களுக்கு இந்தத் திறமை இல்லாதிருந்தது; இஸ்ரயேலர்கள் செங்கல் செய்தவர்களாகவும், கல் உடைத்தவர்களாகவும் பெரும்பாலும் காணப்பட்டனர்; அடிமைகளாகவும், வயலில் வேலை செய்தவர்களாகவும், காய்ப்பேறிய கைகளை உடையவர்களாகவும் காணப்பட்டனர். அவர்கள் கலைஞர்கள் அல்ல (யாத்திராகமம் 1:13-14). ஆனால் இயல்பாகவே திறமை இருக்கின்றதோ இல்லையோ, ஆசரிப்புக்கூடாரமானது அதன் சகல அடையாளமான அம்சங்களுடன் கட்டப்பட வேண்டியிருந்தது மற்றும் துல்லியமாகவும் கட்டப்பட வேண்டியிருந்தது! சரி, என்ன நடந்தது? தேவன் மிக எளிமையான ஒரு மனிதனைத் தெரிந்துகொண்டு, "***நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும் மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்***" என்று கூறினார் (யாத்திராகமம் 31:2-5). அந்த மனுஷன்/**பெசலெயேல்** நேர்த்தியாய் அவ்வேலையைச் செய்ய முடிபவராக மாற்றப்பட்டார். இது தேவ ஆவியின் வல்லமைக்கான மற்றுமொரு உதாரணமாகும்.

# தேவ ஆவியின் வல்லமை

*"கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்"* என்று நியாயாதிபதிகள் 6:34-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். **கிதியோன்** விவசாயியாக மாத்திரம் காணப்பட்டார்; கோதுமையைப் போரடிக்கிறவராகக் காணப்பட்டார். ஆனால் தேவ ஆவி இவரை ஏவினபோது, தன்னைப் போலுள்ள 300-புருஷர்களைத் தன்னோடுகூடக் கூட்டிக்கொண்டுபோய், மீதியானியர்கள் மற்றும் அமலேக்கியரின் பராக்கிரமமுள்ள இராணுவ சேனை அனைத்தையும் தோற்கடித்தார் என்று பார்க்கின்றோம்.

அடுத்ததாக **சிம்சோனின்** சம்பவத்தைப் பார்க்கலாம். "தேவ ஆவி சிம்சோனை ஏவினது" என்று வாசிக்கின்றோம். அப்போது பெலிஸ்தர்கள் இஸ்ரயேலரை ஒடுக்கிக்கொண்டிருந்தனர்; மேலும் பெலிஸ்தருடைய பொல்லாப்பு முழு அளவை எட்டியிருந்தது. தேவ ஆவி சிம்சோனை ஏவினபோது, என்ன சம்பவித்தது? சிம்சோன் "அவர்களைச் சின்னாபின்னமாகச் சங்காரம்பண்ணினார்" என்றும், இன்னொரு தருணத்தின்போது, *"கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினது . . . உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடை எலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான்"* என்றும் வாசிக்கின்றோம் (நியாயாதிபதிகள் 15:8,14-15). கொஞ்சக்காலம், அவரிடம் தேவ ஆவி இல்லாதிருந்தது; இன்னுமாக அவரது மகா பலமும் அவரைவிட்டுப் போயிற்று. ஆனால் மறுபடியும் அவர்மேல் ஆவி வந்தபோது, தாகோனின் மாபெரும் கோயிலைத் தாங்கி நின்ற தூண்களைத் தள்ளிப் போடும் வல்லமை அவருக்கு வந்தது; தூணைத் தள்ளி, சிம்சோன் கோயிலில் கூடியிருந்த அனைவரையும் அழித்துப்போட்டார் மற்றும் கோயிலும் இடிந்துபோனது என்று பார்க்கின்றோம். சிம்சோன், முற்பிதாக்களில் ஒருவர் என்று பவுல் அடிகளார் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் பட்டியலிட்டுள்ளார். நாம் வாசிக்கின்ற இவை அனைத்தையும் தேவ ஆவியினால் சிம்சோன் செய்தார்.

**தாவீதும்கூட** ஓர் உதாரணமாக விளங்குகின்றார். "*சாமுயேல், தைலக்கொம்பை எடுத்து, தாவீதை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்*" என்று வாசிக்கின்றோம் (1 சாமுயேல் 16:13). பின்னர் மேய்ப்பனாகிய இந்த இளைஞன், பராக்கிரமமுள்ள பெலிஸ்திய இராட்சதன் கோலியாத்தை வெட்டி வீழ்த்தினார்; பின்னர் இஸ்ரயேலின் மாபெரும் சிறந்த இராஜாவானார்; பின்னர் ஒரு தீர்க்கத்தரிசியாகவும், இனிமையான கவிஞனாகவும் மற்றும் சங்கீதக்காரனாகவும் மாறினார்; பின்னர் "தாவீதின் குமாரன்" என்று அழைக்கப்பட்டவரும், ஆயிர வருடத்தில் உலகை ஆளுகைசெய்யப்போகின்றவரும், "தாவீதின் அரியணைக்கு" உரியவருமான இயேசு மனிதனாக வந்தபோது, அவருக்கு இந்தத் தாவீது மூதாதையராகக் காணப்பட்டார் என்றும் பார்க்கின்றோம்.

உதாரணங்கள் அனைத்திலும் மிகச்சிறந்த உதாரணமாக **இயேசு** காணப்படுகின்றார். இயேசுவைக்குறித்து ஏசாயா 11:1-2-ஆம் வசனங்களில் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டுள்ளது. "*ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.*" மத்தேயு 3:16-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோலவே தேவ ஆவி அவர்மேல் உண்மையில் இறங்கியிருந்தது; "*இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*" பின்னர்த் தம்மைக்குறித்து, "*கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்*" என்று இயேசுதாமே கூறியிருக்கின்றார் (லூக்கா 4:18). இயேசு ஆவியில் முழுமையாய் நிரம்பினவராகக் காணப்பட்டார். அவரது சகல எண்ணங்களும், செய்கைகளும் தேவ ஆவிக்கு இசைவாகக் காணப்பட்டது. அது

அவரது ஜீவியத்தின் ஒவ்வொரு நரம்புகளிலும் ஊடுருவிக் காணப்பட்டது. அவர் அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்தாரென யோவான் 3:34-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. இந்த ஆவி, இயேசுவில் எந்த விதத்தில் வெளிப்பட்டது? இந்த ஆவி என்ன கனிகளைக் கொடுத்தது?

இதைப் பேதுரு அடிகளார் கொர்நேலியுவுக்குப் பிரசங்கிக்கையில் மிக அருமையாகத் தெரிவித்துள்ளார்; இதை அப்போஸ்தலர் 10:38-39-ஆம் வசனங்களில் வாசிக்கலாம்: ***"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள்."***

தேவ ஆவியினாலும், அதன் வல்லமையினாலும் நிரம்பிக் காணப்பட்ட இயேசு, நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தார். அவர் நாட்களில் காணப்பட்ட மதத்தலைவர்களின் கண்மூடித் தனமான எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், அவர் இராஜ்யத் தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்; பொது ஜனங்கள் அவருக்கு மகிழ்ச்சியோடு செவிகொடுத்தார்கள். அவர் அன்பும், மனதுருக்கமும்கொண்டு அநேக அற்புதங்களைச் செய்தார், சகலவிதமான நோய்களையும் குணப்படுத்தினார்; மரித்தோரைக்கூட உயிரோடு எழுந்திருக்கப்பண்ணினார். குருடான கண்களைப் பார்வையடையப் பண்ணினார்; செவிடான காதுகளைக் கேட்கப்பண்ணினார்; ஊமையாய்க் காணப்பட்டவர்களைப் பேசப் பண்ணினார்; அவர் பிசாசுகளைத் துரத்தினார். இவைகளை யெல்லாம் செயல்படுத்துவதற்குத் தமது சொந்தச் சக்தியையும், உடலாற்றலையும் இலவசமாகப் பயன்படுத்தினார். அவர் கடலின்மேல் நடந்தார்; பெரும் புயலை அமைதியடையப் பண்ணினார்; ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு அவர்

5000-ஜனங்களைப் போஷித்தார்; தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினார். **தேவனுடைய மெய்யான ஞானத்தின் சாராம்சத்தை** உள்ளடக்கினதாகவும், அதேசமயம் உலகத்தினுடைய பரிதாபகரமான நன்னெறிகள் மற்றும் வழக்கங்களை அவமாக்கிப்போடுகிறதாகவும் காணப்பட்ட "பிரசங்கம்" ஒன்றினை (மலைப்பிரசங்கம்) மலையில் பிரசங்கித்தார். அவர் அநேக பிரம்மாண்டமான உவமைகளைப் பேசினார்; அப்படிப் பேசினதாக 49-உவமைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது; இவைகள் மூலம் தம்முடைய சீஷர்களுக்கு அவர் மிகப்பெரிய பாடங்களைக் கற்றுக்கொடுத்திருக்கின்றார். ஜனங்களை ஏமாற்றிக் கொண்டிருந்த வேதபாரகர்களையும், பரிசேயர்களையும், இன்னும் மற்றவர்களையும் அவர் கடுமையாகவும், வெளிப்படையாகவும் கண்டித்தார். அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாகக் காணப்பட்டார்; மேலும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள அவர் முற்றிலும் திராணியுள்ளவராக இருந்த போதிலும், தாம் காட்டிக்கொடுக்கப்படத்தக்கதாகவும், பரியாசப் படுத்தப்பட்டு விசாரிக்கப்படத்தக்கதாகவும், வாரினால் அடிக்கப்படத்தக்கதாகவும், இன்னும் பல விதங்களில் அவமதிக்கப் படத்தக்கதாகவும், இறுதியாக சிலுவையில் வியாகுலமான மரணம் அடையத்தக்கதாகவும், அவர் தம்மையே விரும்பி ஒப்புக்கொடுத்த வராகக் காணப்பட்டார்.

எல்லா விஷயத்திலும் துல்லியமாகத் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு அவர் வாழ்ந்த **ஜீவியத்தின் மூலமும்,** மரணத்திற்குப் பாத்திரனல்லாத அவர் **மரித்ததின் மூலமும்,** ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்கு **அவர்** ஈடுபலியாகி அல்லது சரிநிகர்சமான விலையாகி, உங்களையும், என்னையும் மீட்டுக்கொண்டார்; மேலும் தம்முடைய ஆவியைப் பெற்றுக்கொண்டு, தம்மைப்போல் பலியாகுவதற்கு மற்றும் மரிப்பதற்கு என்று தம்முடைய அடிச்சுவடுகளில் நடப்பவர்கள் யாவரும் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடவும், இவைகளைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டி, அவர் தம்

மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் வாயிலாகப் புதிதும், ஜீவனுக்கேதுவானதுமான வழியினைத் திறந்துவைத்தார். **தேவ ஆவியானது முற்றும் முழுவதுமாக ஒருவரை ஆளுகைசெய்து, உச்சிதமான பலன்களைக் கொணர்ந்ததற்கு, இயேசு உதாரணமாக விளங்குகின்றார்!**

## பெந்தெகொஸ்தே நாளில் வந்த வல்லமை

இப்பொழுது நாம் **பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்விற்கு** வருகின்றோம். "**யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்**" என்று இயேசுவால் கொடுக்கப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாகச் சீஷர்கள், வாக்குத்தத் தத்தின் நிறைவேறுதலுக்காக எருசலேமில் காத்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 1:4); மேலும் "**பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்**" என்று வாசிக்கின்றோம். (அப்போஸ்தலர் 2:1-4)

சற்று முன்பு அவர்கள் அஞ்சினவர்களாகவும், பயந்து காணப்பட்டவர்களாகவும், நடுங்குகிறவர்களாகவும், மேல் வீட்டறையில் ஒளிந்துகொண்டிருந்தவர்களாகவும், கதவுகளைப் பூட்டி, தாழ்ப்பாளிட்டுக் கொண்டிருந்தவர்களாகவும், கூடுமான மட்டும் சத்தமின்றி ஒளிந்து காணப்பட்டவர்களாகவும், வேவுகாரர் அல்லது உரோம அதிகாரிகள் வந்துவிடுவார்களோ என்று காலடி சத்தம் ஒவ்வொன்றைக்குறித்தும் கிலேசப்பட்டுக் கொண்டிருந் தவர்களாகவும் காணப்பட்டனர்; ஆனால் திடீரெனக் காலடி

சத்தமல்ல, "*பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போன்ற*" சத்தம் உண்டாயிற்று. கடுஞ்சூறாவளி அல்லது கடும்புயலின், அதாவது பலத்த புயல் காற்றின் இரைச்சலை நீங்கள் எப்போதேனும் கேட்டிருக்கின்றீர்களா? அது மகா இரைச்சலாகக் காணப்படும்; அது எல்லா இடங்களிலும் பரம்பிக் கேட்கும். "*அந்த முழக்கம் அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று*" என்று வாசிக்கின்றோம். அடுத்த கணம், "*அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்*" என்று வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 2:4). அடுத்து என்ன நடந்தது? அவர்கள் பேச ஆரம்பித்துவிட்டார்கள்! அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பிரசங்கிக்க ஆரம்பித்துவிட்டார்கள்! அவர்கள் (உடனே பூட்டியிருந்த) கதவுகளின் தாழ்ப்பாள்களைத் திறந்திருக்க வேண்டும்; ஜன்னல்களைத் திறந்திருக்க வேண்டும்; அவர்கள் தங்கள் சத்தம் நன்கு தொலைவில் கேட்கத்தக்கதாகச் சத்தமாய்ப் பேசினார்கள்; ஏனெனில், "*அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா எனக் கூறினார்கள்*" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 2:6-7). அது முதற்கொண்டு சுவிசேஷமானது, தைரியமாகவும், விறுவிறுப்பாகவும் பிரசங்கிக்கப்பட்டது. ஆவியினுடைய மறுரூபமாக்கும் மற்றும் ஊக்கமூட்டும் வல்லமை எப்படியாகக் காணப்படும் என்பதை உங்களால் காணமுடிகின்றதா?

இதற்கு மற்றுமொரு உதாரணம் **ஸ்தேவான்** ஆவார். இவரைக்குறித்து "*விசுவாசமும், பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவான்*" என்று எழுதப்பட்டிருப்பதை வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 6:5). இவரைக்குறித்து 8 மற்றும் 10-ஆம் வசனங்களிலும் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "*ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தான். அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க*

*அவர்களால் கூடாமற்போயிற்று.*" ஸ்தேவானுடைய உண்மைத்தன்மையானது, முதல் இரத்த சாட்சியாகுவதற்கு இவரை வழிநடத்தினது என்று பார்க்கின்றோம். சொற்ப காலத்திலேயே, இவர் பரிசுத்த ஆவியினால் நிரம்பிக் காணப்பட்ட காரியமானது, இவரை விசுவாசத்திலும், கிருபையிலும், பலத்திலும் வளரச்செய்தது. இவர்மேல் ஜனக்கூட்டத்தார் கற்களை வீசினபோது, தனது இறுதி மூச்சு விடும் தருணத்திலும், "*இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்*" என்று இவரால் சொல்ல முடிந்தது.

இன்னொரு உதாரணமாக, நாம் தர்சு பட்டணத்து **சவுலைப்** பெற்றிருக்கின்றோம். தமஸ்குவுக்குப் போகிற பாதையில் பரலோகத்திலிருந்து வெளிப்பட்ட வெளிச்சத்தின் மூலம் இவர் குருடனாக்கப்பட்டார். இவர் இயேசுவின் சத்தத்தைக் கேட்டார்; இன்னுமாக மகிமை அடைந்திருந்த இயேசுவை கண நேரம் கண்டார். பின்னர் இவரிடம் அனனியா என்னும் பேருள்ள சீஷன் அனுப்பிவைக்கப்பட்டார். இதைக் குறித்த பதிவை அப்போஸ்தலர் 9:17-ஆம் வசனத்தில் நீங்கள் காணலாம். அனனியா இவர்மேல் கை வைத்தபோது, இவர் பார்வையடைந்தார்; இன்னுமாக இவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார். பின்னர் காரியங்கள் மாற ஆரம்பித்தது! கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தின சவுலாகிய இவர், அப்போஸ்தலர்களில் பிரதானமானவராகக் காணப்பட்ட பவுலாக மாறினார். அப்போஸ்தலர் 9:15-16-ஆம் வசனங்களில் கர்த்தர் அனனியாவிடம் பின்வருமாறு கூறியுள்ளார்: "*கர்த்தர்: அவன் புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.*"

பிற்காலங்களில் பவுல் கொரிந்தியர்களுக்கு நிருபம் எழுதும்போது, இந்தத் தனது பாடுகள் மற்றும் கஷ்டங்கள் குறித்துப் பின்வருமாறு எழுதுகின்றார்: "*நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க்*

**காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது."** (2 கொரிந்தியர் 11:23-28)

பரிசுத்த ஆவியினால் நிரம்பினவராகவும், அதனால் உந்தித்தள்ளப்பட்டவராகவும் காணப்பட்ட பவுல், இந்தப் பாடுகள் அனைத்தையும் சகித்து, அவைகளில் மேன்மைப்பாராட்டிக் கொண்டார் என்று பார்க்கின்றோம். **"ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்."** (அப்போஸ்தலர் 20:24)

இவைகள் தேவனுடைய பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளுக்கும், அந்த ஆவியினால் உண்டாகும் மாறுதல்களுக்குமான சில உதாரணங்களாகக் காணப்படுகின்றன. இந்த உதாரணங்கள் அனைத்திலும் "**பொதுவான ஒற்றுமை**" ஏதேனும் இருப்பதாகத் தெரிகின்றதா? ஆம்! **இந்த ஒவ்வொரு உதாரணங்களிலும்,**

**பரிசுத்த ஆவி செயல்படத் துவங்கின உடனே, சில காரியங்கள் நடக்கத் துவங்குகின்றன! பரிசுத்த ஆவியின் செயல்களினால் பலன் வருகின்றன, விளைவுகள் காணப்படுகின்றன!**

ஆதியில் தேவ ஆவி ஜலத்தின்மீது அசைவாடினபோது, பூமி பலன்களைக் கொணர்ந்தது. தேவ ஆவி யோசேப்பின்மீது வந்தபோது, இவர் அடிமையின் நிலையிலிருந்து, எகிப்தின் அதிகாரியாக மாறினார். தேவ ஆவி மோசேயின்மீது வந்தபோது, மனுஷர் யாவருக்குள்ளும் சாந்தமானவராகக் காணப்பட்ட மோசே, வல்லமையுள்ள தலைவனாகவும், நியாயப்பிரமாணிக் கனாகவும் மாறினார். அடிமையும், சாதாரணமானவரும், செங்கல் செய்தவருமான பெசலெயேல் தேவ ஆவியினால் நிரப்பப்பட்ட போது, இவர் வனாந்தரத்தில் ஆசரிப்புக்கூடாரம் கட்டப்படுவதற்கு அவசியப்பட்ட பொன், வெள்ளி, தாமிரம், விலையேறப்பெற்ற கற்கள், திரைச்சீலைகள், மரம் முதலியவைகளைக்கொண்டு வேலைசெய்யும் கைத்தேர்ந்த கலைஞனாகவும், கைவினை ஞனாகவும் மாறினார். தேவ ஆவி சிம்சோனிடம் வந்தபோது, இவர் மிகுந்த பலத்திலும், வைராக்கியத்திலும் தேவ சித்தத்தை நிறைவேற்றினார். தாவீதின்மீது தேவ ஆவி வந்தபோது, இவர் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனுஷனானார். யோர்தானில் தேவ ஆவி இயேசுவின்மேல் இறங்கினபோது, வானங்கள் இவருக்குத் திறந்தன; இன்னுமாக இவர் தேவனுடைய பரிபூரண சித்தத்தினை அறிந்துகொண்டு, அதை நிறைவேற்றினார், அதுவும் சிலுவையின் மரணபரியந்தம் நிறைவேற்றினார் என்று பார்க்கின்றோம்.

பெந்தெகொஸ்தே நாளில் காத்திருந்தவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது, பயந்து ஒளிந்து காணப்பட்ட கிறிஸ்தவர்கள் என்ற நிலைமையிலிருந்து இவர்கள், உடனடியாகச் சிலுவைப் போர்வீரர்களென வாழும் மற்றும் பிரசங்கிக்கும் கிறிஸ்தவர்களாக மாறினார்கள்; இவர்கள் சுவிசேஷத்தை எல்லா மொழிகளிலும் பரப்பினார்கள். ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது, "*இவர் பேசின ஞானத்தையும், ஆவியையும்*

*எதிர்த்துநிற்க ஜனங்களால் கூடாமற்போகும் அளவுக்கு*" இவர் நாவன்மையுடையவராக மாறினார்; இன்னுமாக தன்னை ஜனங்கள் கொன்று கொண்டிருக்கும்போதும்கூட, தன்னைக் கொலை செய்பவர்களை மன்னித்தருளும்படிக்குத் தேவனிடம் ஜெபிக்குமளவுக்கு அன்பை நிரம்பப் பெற்றிருந்தவராகக் காணப்பட்டார்! தர்சு பட்டணத்து சவுல் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது, இவர் முழுவதுமாக மாறிவிட்டார்; மூர்க்கத் தனமாகவும், கொடூரமாகவும் சபையைத் துன்புறுத்திய நபர் என்னும் நிலைமையிலிருந்து, பிரதானமான அப்போஸ்தலனாகவும், ஊழியக்காரனாகவும் மாறிவிட்டார்; இன்னுமாக புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியை எழுதியவரானார்; நிஜமாகவே தன் ஜீவனை சுவிசேஷத்திற்காக ஒப்புக்கொடுத்து விட்டவராகவும் காணப்பட்டார். இந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், **ஒரு விளைவை** நாம் பொதுவாகப் பார்க்க முடிகின்றது - அதாவது பரிசுத்த ஆவியானது எப்போதுமே கனியினை/பலனை/விளைவைக் கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது. பரிசுத்த ஆவி எங்கெல்லாம் அனுப்பிவைக்கப்பட்டதோ, அங்கெல்லாம் அது எப்போதுமே செழித்தோங்கி இருந்திருக்கின்றது. அது எப்போதுமே பலனைக் கொண்டுவந்திருக்கின்றது. அது ஒருபோதும் பலன்கொடுக்கத் தவறினதில்லை.

## பரிசுத்த ஆவியும், நாமும்...

வியப்பூட்டுகின்றதும், சிந்திக்கவைக்கின்றதுமான ஒரு கருத்தைக்குறித்து இப்பொழுது பார்க்கலாம். அதென்னவெனில் . . . இதே பரிசுத்த ஆவியானது, அதாவது தேவனுடைய இந்த மகா வல்லமையானது, நம் சார்பிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதேயாகும்! அது நம்மிலும் செயல்படுகின்றது; அது நம்மில் வாசம்பண்ணுகின்றது; அது நம்மை நிரப்புகின்றது (எபேசியர் 5:18). "*ஆவியினால் நிறைந்து*" என்று கலாத்தியர் 5:25-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. "*தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்*" என்றும், "*நீங்கள் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்*" என்றும் உரோமர் 8:9-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. "*அன்றியும்*

***இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்*"** என்று உரோமர் 8:11-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. மரித்தோரிலிருந்து இயேசுவை உயிர்த்தெழுப்பின காரியம், **வல்லமையினுடைய பிரம்மாண்டமான வெளிப்பாடாகும்**; மேலும் அந்த ஆவியே நம்மில் வாசமாயிருக்கின்றது; அதுவே நமக்குத் தேற்றரவாளனாகவும், உதவியாளனாகவும் காணப்படுகின்றது. "***எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராக இருக்கிறார்கள்***" என்று உரோமர் 8:14-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. நாம் "***பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களாக***" இருக்கின்றோம் என்று எபிரெயர் 6:4-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. "***நாம் பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டிருக்கின்றோம்***" என்று எபேசியர் 1:13 -ஆம் வசனம் தெரிவிக்கின்றது. நாம் தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் என்று 1 யோவான் 5:18-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. "***நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்***" என்று எபேசியர் 3:16-ஆம் வசனம் தெரிவிக்கின்றது. இவைகளெல்லாம் **வல்லமையைச்** சுட்டிக்காட்டுகின்றதல்லவா? "***தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்***" என்று பிலிப்பியர் 2:13-ஆம் வசனம் தெரிவிக்கின்றது.

ஆகையால் நாம் கையாளுவது ஏதோ ஒரு சாதாரணமான காரியமல்ல! நாம் தேவனுடைய வல்லமையைக் கையாண்டு கொண்டிருக்கின்றோம்! நாம் இதுவரையிலும் குறிப்பிட்டிருந்த சாட்சியங்களை வைத்துப்பார்க்கும்போது, நம் விஷயத்திலும் பலன்கள்/கனி எதிர்பார்க்கப்படும் என்று சொல்லலாம் அல்லவா? அதாவது கனி கொணரவேண்டும் மற்றும் கனி கொணரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதை, "*ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட*" என்று குறிப்பிடும்போது, பவுல் அடிகளார் உறுதிப்படுத்துகின்றார். (உரோமர் 8:23)

இப்பொழுது இந்தக் கனிகள் என்னென்ன என்று பார்க்கலாம்; இன்னுமாக நாம் ஊக்கமடையத்தக்கதாக,

அவைகளை நாம் பெற்றிருக்கின்றோமா அல்லது அவைகளை நாம் வளர்த்துக்கொண்டிருக்கின்றோமா என்றும், இப்படியாக நாம் உண்மையிலேயே "*தேவனுடைய புத்திரர்களாக*" இருக்கின்றோமா என்றும் உறுதிப்படுத்திக்கொள்வோமாக. "***நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.***" (உரோமர் 8:16-17)

ஆவியின் கனிகளைக் கலாத்தியர் 5:22,23-ஆம் வசனங்கள் பட்டியலிடுகின்றன. "***ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை*** (அல்லது சகிப்புத்தன்மை), ***தயவு*** (அல்லது இரக்கம்), ***நற்குணம், விசுவாசம்*** (அல்லது நேர்மை), ***சாந்தம், இச்சையடக்கம்*** (அல்லது சுயகட்டுப்பாடு) ***ஆகும்.***" **அன்புதான் பட்டியலில் முதலிடம் வகிக்கின்றது.** அதுவே முக்கியமானதும், பிரதானமானதுமாய்க் காணப்படுகின்றது. மற்ற அனைத்துக் கனிகளும் அன்பிடமிருந்து வருவதால், நாம் இப்பாடத்தில் **அன்பின்மீது மட்டும்** கவனம் செலுத்தப் போகின்றோம்.

## அன்பினுடைய முக்கியத்துவம்

ஒருவர் இயேசுவை நோக்கி: "***போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது***" என்று கேட்டார் (மத்தேயு 22:36). அக்காலத்தில் யூதர்களுக்கு 3,600-கட்டளைகள் காணப்பட்டன; மேலும், அவைகளில் எது பிரதானமானது என்ற கேள்வி இயேசுவிடம் கேட்கப்பட்டது. "***போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே.***" (மத்தேயு 22:36-39)

யூதர்கள் விஷயத்தில் நியாயப்பிரமாணமானது, அதாவது கட்டளைகளானது ஒருவேளை முழுமையாய்க் கைக்கொள்ளப் படும்போது, அது அவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கக் கூடியதாய்க் காணப்பட்டது; ஆனால் அதைக் கைக்கொள்வது என்பது, அவர்களுக்குக் கூடாத காரியமாய்க் காணப்பட்டது. நம் விஷயத்தில் பார்க்கும்போது, தேவ ஆவியின் கனியாகிய அன்பானது, நாம் அவரது பிள்ளைகளாக, சுதந்தரர்களாக, அவரது வீட்டின் அங்கத்தினர்களாக இருக்கின்றோம் என்பதற்குச் "**சான்றாக**" விளங்குகின்றது; 1 யோவான் 4:16-ஆம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கின்றதுபோல, "***தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக் கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.***" இந்த வேதவாக்கியத்தின் முழுமையான அர்த்தத்தினை உங்களால் புரிந்துகொள்ள முடிகின்றதா? நம்முடைய அர்ப்பணிப்பின் ஜீவியமானது, **அன்பினால் இயக்கப்படுகின்றதாகவும், ஆளப்படுகின்றதாகவும் "இருக்குமானால்,"** இன்னுமாக "**தேவன்**" "**அன்பாக**" இருக்கின்றார் என்று வசனம் தெரிவிக்கின்றபடியால், **நாம் தேவனில் நிலைத்திருப்பவர்களாகக் காணப்படுவோம்** என்று சொல்லப்படுகின்றது. இது பவுல் அடிகளாராலும் அப்போஸ்தலர் 17:28-ஆம் வசனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; அது பின்வருமாறு: "***அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்.***"

ஆனால் அந்த வேதவாக்கியமானது, இவைகளையும் தாண்டின விளக்கத்தினைக் கொண்டிருக்கின்றது. நாம் அன்பில் நிலைத்திருந்தால், தேவன் நம்மில் நிலைத்திருப்பார் என்றும் தெரிவிக்கின்றது! இது எப்படிச் சாத்தியம்? சர்வ வல்லமையுள்ள தேவன் நம்முடைய பாவப்பட்ட மனித சரீரங்களில் வாசம்பண்ணக் கூடுமோ? நிச்சயமாக இல்லை! பின்னர் எப்படித் தேவன் நம்மில் வாசம்பண்ணுவார்? பதிலை 1 கொரிந்தியர் 3:16-ஆம் வசனத்தில் பெற்றிருக்கின்றோம்: "***நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்***

*களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?"* தேவன் தம்முடைய ஆவியின் மூலம், தம்முடைய பரிசுத்த செல்வாக்கு/ஆதிக்கத்தின் மூலம் நம்மில் வாசம்செய்கின்றார். ஆனால் நாம் அன்பில் நிலைத்திருப்பதன் மூலமும், அவரைப் பிரதானமாய் அன்புகூருவதன் மூலமும், நம்மை நாம் அன்புகூருவதுபோன்று நம் அயலார்களை அன்புகூருவதன் மூலமும், நம்மைவிட நம்முடைய சகோதர சகோதரிகளை அன்புகூருவதன் மூலமும், இன்னுமாக அவரது அன்பின் ஆவியினை முழுமையாய் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக நம்முடைய இருதயங்களை விரிவுபடுத்துவதன் மூலமும், "அவர் நம்மில் வந்து வாசம்பண்ண நாம் இடமளிக்க வேண்டும்." அப்போது அவர் நம்மில் நிச்சயமாக வாசம்பண்ணுவார்.

அன்பு தேவனுடைய பிரதான பண்பாகக் காணப்படுகின்றது; மேலும் அதற்கு மிகுந்த வல்லமையுண்டு. "*தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்*" என்று பவுல் அடிகளார் கூறியுள்ளார் (2 தீமோத்தேயு 1:7). வல்லமையும், அன்பும் ஒன்றோடொன்று தொடர்புகொண்டவையாகும். அன்பிற்கு வல்லமையுண்டு! ஜீவனுக்கும், மரணத்திற்குமான வல்லமை அன்பிற்கு உண்டு! ஓர் உதாரணம் பின்வருமாறு:

**"பல வருடங்களுக்கு முன்னதாக, நியூயார்க்கிலுள்ள Bellevue மருத்துவமனையில், குழந்தைகள் பிரிவு ஊழியர்கள் மிகவும் வேதனையளிக்கும் ஒரு பிரச்சனையை எதிர்கொண்டனர். ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளில், 32 சதவிகிதம் குழந்தைகள் இறந்துகொண்டிருந்தனர்;அதாவது மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் இறந்துகொண்டிருந்தனர். பெரும்பாலும், சாதாரண உடல்நலக் குறைபாடுகளாலேயே அக்குழந்தைகள் உயிரிழந்துக் கொண்டிருந்தனர். மருத்துவர்கள் பெரும் குழப்பத்தில் காணப்பட்டனர். யாருக்கும் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தக் குழந்தைகளுக்கு அறிவியல் முன்னேற்றங்களின்**

**உச்சகட்ட மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது. குழந்தைகளுக்குத் தூய்மையான மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழ்நிலைகள்தான் காணப்பட்டது. அக்குழந்தைகளுக்காக சிறந்த தரம்வாய்ந்த உணவுகள் கவனமாகத் தயாரிக்கப் பட்டிருந்தது. வெப்பநிலை சரியாகக் கண்காணிக்கப்பட்டது. படுக்கைகள் வசதியாக இருந்தது; எல்லாம் சரியாகத்தான் இருந்தது, ஆனால் குழந்தைகள் இறந்துகொண்டேயிருந்தன. மருத்துவமனையில் வழங்கப்படாத ஒரே விஷயம் அன்புதான் என்று இறுதியில் ஒரு மருத்துவர் கருதி, தனது யோசனையைத் தெரிவித்தார். இது புதுமையான யோசனை என்றாலும், வேறு வழியில்லாமல், அன்புதரும் தன்னார்வத் தொண்டர்களை அழைக்கும்படி (மருத்துவ குழுவினர்) அழைப்பு விடுத்தனர். குழந்தைகளுக்கு அன்புசெலுத்த ஒவ்வொரு நாளும் பெண்கள் அடிக்கடி வந்து போகும்படிக்கு அழைப்பு விடுக்கப்பட்டார்கள். நூற்றுக்கணக்கான பெண்கள் முன்வந்தார்கள்; ஏனெனில் இந்தப் பெண்களுக்கும்கூட அன்பு செலுத்துவதற்கான தேவையிருந்தது. அந்தப் பெண்கள் வந்து குழந்தைகளை அணைத்துக் கொண்டார்கள், குழந்தைகளுக்கு உணவு ஊட்டி பராமரித்தார்கள்; அவர்களுக்குத் தாலாட்டுப் பாடினார்கள்; அவர்கள்மேல் பாசம் காட்டினார்கள்; அவர்கள்மேல் அன்பைப் பொழிந்தார்கள். இறப்பு விகிதம் உடனடியாகக் குறைய ஆரம்பித்தது. நான்கு மாதங்களில் இறப்புச் சதவீதம் கிட்டத்தட்ட பூஜ்யமாகக் குறைந்துவிட்டது.”**

தேவன் தம்முடைய மனித சிருஷ்டிகளுக்கு அருளியுள்ள சுபாவ அன்பிற்கு இருக்கும் வல்லமையினை, அதாவது அதற்கு இருக்கும் அபார/மிகுந்த வல்லமையினை, அதாவது ஜீவன் மற்றும் மரணம் தொடர்பான அதன் வல்லமையினை இச்சம்பவ மானது நிரூபித்துள்ளது! அப்படியானால், தேவன் கிறிஸ்துவுக் குள்ளான தம்முடைய புதுச்சிருஷ்டிகளுக்கு அளித்திருக்கும் உயர்ந்த அன்பின் வல்லமை எத்தனை அதிகமாய்க் காணப்படும்! **அன்பு என்பது கொடுப்பதன் மூலமே வளரும்.** இதுவே அன்பின் அதிசயமாகும். ஞானி ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார்:

"நீங்கள் தொடர்ந்து வெளிப்படுத்தும் குணங்களே, உங்களது உண்மையான குணங்களாகிவிடும். நீங்கள் வெறுப்பை வெளிப்படுத்திக்கொண்டே இருப்பீர்களானால், அனைத்தையும் வெறுக்கிறவராகவே மாறிவிடுவீர்கள். விமர்சித்துக்கொண்டே இருப்பீர்களானால், விமர்சிப்பவராகவே மாறிவிடுவீர்கள். அன்பு பாராட்டிக்கொண்டே இருப்பீர்களானால், அன்பானவராகவே மாறிவிடுவீர்கள்."

எப்படி மருத்துவமனைக்கு பெண்கள் வந்து குழந்தை களுக்கு அன்பைப் பகிர்ந்துகொண்டு, தாங்களும் அன்பினால் நிரம்பப்பெற்றவர்களாகி, அன்பினால் ஆசீர்வதிக்கப்பட்டார் களோ, அதுபோலவே **நாமும் அன்பைக் கொடுக்கும்போதுதான், அன்பை நம்மில் வளர்த்துக்கொள்பவர்களாக இருப்போம்.** தேவனுடைய வீட்டாரின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஆவிக்குரிய அன்பு, நமக்கு அவசியமாய் உள்ளது; இல்லையேல் அந்த மருத்துவமனையில் குழந்தைகள் இறந்துகொண்டிருந்ததுபோன்று, நாமும் புதுச்சிருஷ்டிகளென இறந்துவிடுகிறவர்களாக இருப்போம்; ஆகையால் தேவனுடைய குணலட்சணத்தின் சாராம்சமாகக் காணப்படும் அன்பின் ஆவி, நம்முடைய இருதயங்களில் நிரம்பத்தக்கதாக, அதற்கு நம் இருதயங்களில் மேலும் மேலும் இடம் கொடுப்போமாக! அதற்கு மகா வல்லமையுண்டு. அது நம்மை மறுரூபமாக்கும்; அதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்! 1 பேதுரு 1:22-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல, "***நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப் படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாய் இருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்.***"

அப்போஸ்தலனால் குறிப்பிடப்பட்டிருக்கும் அன்பானது, சுபாவ மனிதனின் உணர்ச்சிவசப்படும் அன்போ அல்லது காதல் பிணைப்போ அல்ல. இவைகள் தவறு அல்லது பாவம் என்று நான் (ஆசிரியர்) சொல்ல வரவில்லை; மாறாக இவைகளைக்குறித்து

அப்போஸ்தலன் இங்குக் குறிப்பிடவில்லை என்றே சொல்கின் றேன். அப்போஸ்தலனால் குறிப்பிடப்படும் அன்பானது மிகவும் ஆழமானதும், பரந்ததும், மகத்துவமானதுமாகும். இந்த உயர்ந்த அன்புதான், கிறிஸ்தவ குணலட்சணத்தின் மிக முக்கியமான அம்சமாகவும், ஆவியின் கனிகளில் மிக முக்கியமான கனியாகவும் காணப்படுகின்றது.

யோவான் 13:34-35-ஆம் வசனத்தின் வார்த்தைகளை இயேசு பேசினபோது, அவர் அன்பை, சீஷத்துவத்திற்குரிய நிபந்தனையாகவும், சான்றாகவும் ஏற்படுத்தியுள்ளார்: "***நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாய் இருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.***" சகோதர சகோதரிகளுக்கு "அன்பு" எவ்வளவு முக்கியமாக இருக்கின்றது என்று அப்போஸ்தலனாகிய யோவான் பின்வருமாறு வலியுறுத் தியுள்ளார்: "***நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டி ருக்கிறான்***" (1 யோவான் 3:14). நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கின்றோமா? நாம் புதுச்சிருஷ்டிகளென ஜீவனோடு இருக்கின்றோமா? இல்லையேல், இன்னமும் உலகத்தோடு மரித்த நிலையில் இருக்கின்றோமா? மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கின்றோமா? மரணம் எனும் line/கோட்டைக் கடந்து உள்ளோமா? சகோதர சகோதரிகளுக்கான அன்பு என்பதே நமக்கான பரீட்சை - இதுவே சட்டமாகக் காணப்படுகின்றது!

## சகோதர சகோதரிகளுக்கு எப்படி நாம் அன்புகாட்டுவது?

நம்மை நாம் சோதித்துப்பார்த்து, "***நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கின்றோம்***" என்று அறிந்துகொள்ளத்

தக்கதாக, இன்னுமாக இது விஷயத்தில் யாதொரு சந்தேகமும் நம் மனங்களில் காணப்படாமல் இருக்கத்தக்கதாக, இன்னுமாக இது விஷயத்தில் நாம் உறுதிப்படுத்தப்படத்தக்கதாக, நாம் நம் சகோதர சகோதரிகள்பால் அன்புபாராட்ட முடிகிற சில வழிகளைக்குறித்து இப்பொழுது பார்க்கலாம். அவை பின்வருமாறு:

1. சோதனைகள் மற்றும் பிரச்சனைகளின் மத்தியில், நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு நாம் ஆறுதலின் வார்த்தைகள் கூறுவதை தவிர்த்துக்கொள்ளாததன் மூலம், சகோதர சகோதரிகளுக்கான நம்முடைய அன்பை நாம் வெளிப்படுத்தலாம். அத்தகைய ஆறுதலின் வார்த்தைகளை நாம் பேசும்போது, நாம் பரிசுத்த ஆவியில் குறைவுபட்டவர்கள் இல்லை என்பதை நிரூபிப்பவர்களாய் இருப்போம்; **ஏனெனில் நம்முடைய சொந்த இருதயங்களுக்காக மட்டுமல்ல, நம் மூலம் மற்றவர்களுக்கும் ஆறுதல் வழங்குவதற்காகவே பரிசுத்த ஆவியானது அருளப்பட்டுள்ளது.** ***"நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்ய திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்."*** (2 கொரிந்தியர் 1:3-4)

சில சமயங்களில் நம்முடைய அருமையான சகோதர சகோதரிகள் சிலரின் ஆறுதலளிக்கும் பிரயாசங்கள், வேறுபட்ட பலன்களையே (ஆறுதலின்மையைக்) கொண்டுவருகின்றது. உதாரணத்திற்கு நான் (ஆசிரியர்) சில கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் என்னிடம் வந்து, "சகோதரனே இந்த ஓட்டத்தில், வேறு என்னத்தை எதிர்பார்த்தீர்கள்? இந்த ஓட்டத்தில் சோதனைகள் வருமென்று உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று கூறுகின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். **நீங்கள் சொல்லும் வார்த்தைகள் உண்மையாக இருப்பினும், அது ஆறுதலாக இருப்பதில்லை!** ஒருவேளை நீங்கள் என்னிடம்: "சகோதரனே தேவன் உங்களை அன்புகூருகின்றார் என்பதை

அறிவேன்; இச்சோதனை கடந்துபோகும்போது, உங்களுக்கு நன்மையான ஏதோ ஒன்றைத் தேவன் தருவார் என்ற நிச்சயம் எனக்கு இருக்கின்றது" என்று கூறுவீர்களானால், அது எத்தனை ஆறுதலாயிருக்கும். இல்லையேல் நீங்கள் என்னிடம்: "உங்கள் திராணிக்குமேல் அவர் சோதனையை அனுமதிக்கமாட்டார் என்பதை மறந்துவிடாதீர்கள் சகோதரனே" என்று கூறுவீர்களானால், அது எத்தனை ஆறுதலாய் இருக்கும். இல்லையேல் "நான் ஏதாகிலும் விதத்தில் உங்களுக்கு உதவிசெய்யலாமா சகோதரனே?" என்று என்னிடம் கேட்பீர்களானால், அது எத்தனை ஆறுதலாயிருக்கும். இதுபோன்ற வார்த்தைகள் உண்மையானவைகளாகவும், அதேவேளையில் ஆறுதலளிக்கின்றவைகளாகவும் காணப்படும்.

2. சில சமயங்களில் சகோதர சகோதரிகளுக்கான நம்முடைய அன்பினை, பொருளாதார உதவிகளைச் செய்வதன் மூலம் நாம் வெளிப்படுத்தலாம். ஒருவேளை நாம் திரளான ஆஸ்தி உடையவர்களாக இருப்போமானால், தேவையில் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களிலுள்ள ஒருவருக்கு உதவுவது என்பது நமக்கான சிலாக்கியமாகும். இது அன்பை, உணர்வு ரீதியிலான வடிவிலும், நடைமுறை ரீதியிலான வடிவிலும் வெளிப்படுத்துகின்ற காரியமாகும். "*ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?*" (1 யோவான் 3:17)

## நம்மை நாம் பராமரித்துக்கொள்வோமானால், சகோதர சகோதரிகளுக்குப் பாரமாய்க் காணப்படமாட்டோம்!

3. நம்மால் முடிந்தமட்டும் நம்மை நாம் பராமரித்துக் கொண்டு, நம்முடைய சகோதர சகோதரிகளுக்குப் **பாரமாய்க் காணப்படாமல்** இருப்பதன் மூலமும் சகோதர சகோதரிகளுக்கான நம்முடைய அன்பை வெளிப்படுத்தலாம். மற்றவர்களுக்கு நன்மை

செய்யவேண்டுமென்ற சுயநலமற்ற வாஞ்சையே அன்பாகும்; ஆகையால் நாம் சகோதர சகோதரிகளுக்குப் பாரமாய் இருப்பதற்குப்பதிலாக, அவர்களுக்கு நாம் உதவி செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்களாகக் காணப்படவேண்டும். "*வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்*" (அப்போஸ்தலர் 20:35). "*ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். அவனவன் தன் தன் பாரத்தைச் சுமப்பானாக.*" (கலாத்தியர் 6:2, 5)

4. நம்மைப்போலவே நமது சகோதர சகோதரிகளும், அபூரணர்களாக இருக்கின்றார்கள் என்று நாம் உணர்ந்துகொள்வதன் மூலமும், ஒருவரையொருவர் சகித்துக்கொள்ளும் கிறிஸ்தவ பண்பைச் செயல்படுத்துவதன் மூலமும், அவர்களுக்கான நம்முடைய அன்பை நாம் வெளிப்படுத்தலாம். "*கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடியபொறுமையுமுடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள்*" என்று பவுல் அடிகளார் அறிவுறுத்தியுள்ளார் (எபேசியர் 4:1-2). ஒருவேளை நாம் அனைவருமே மாம்சத்தில் பூரணர்களாய்க் காணப்படுவோமானால், இந்த ஒரு கிறிஸ்தவ பண்பைச்/சகிப்பைச் செயல்படுத்துவதற்கு வாய்ப்பே இராது.

5. சிலர், புதுச்சிருஷ்டிகளெனத் தங்கள் நலனை அல்லது மற்றவர்களுடைய நலனைப் பாதிக்கும்வண்ணம் தங்கள் விழுந்துபோன மாம்சத்தின் பலவீனங்களைச் சிலகாலங்கள் வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர்களாய் இருப்பார்கள்; ஆகையால் சிலசமயங்களில் தவறு செய்திருப்பவர்களிடம் சில எளிமையான உண்மைகளை எடுத்துக்கூறுவது அவசியமாய்க் காணப்படும். அப்படிப்பட்ட தருணங்களில், நம்முடைய சொந்தப் பலவீனங்களைக்குறித்து உணர்ந்துகொண்டவர்களாக, நாம் அவர்களிடம் அன்பாய்ச் சுட்டிக்காட்டுவதன் மூலமும் நம்முடைய

அன்பை நாம் வெளிப்படுத்தலாம். "*அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.*" (எபேசியர் 4:15)

6. சகோதரன் ஒருவரால் **வேண்டுமென்றே செய்யப்படாத தவறுகளை** அமைதியாய்க் கண்டுகொள்ளாமல் இருப்பதன் மூலம், தவறிழைத்த சகோதரன் மீதான நமது அன்பை நாம் சிறந்த விதத்தில் இப்படி வெளிப்படுத்தலாம். சபையின் சமாதானத்தை நாம் குலைத்துப்போட முற்படாமல், இப்படிக் கர்த்தரே தம்முடைய ஏற்றவேளையிலும், வழியிலும் அச்சகோதரனை சரிசெய்திடுவார் என்று கர்த்தருக்காய்ப் பொறுமையோடு நாம் காத்திருப்பதை, அவரது சரீரத்திற்காக நாம் சகித்துக்கொண்டோமெனக் கர்த்தர் நம்மைக்குறித்துக் கருதுவார். நாம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், நாம் மாம்சத்தில் காணப்படும் நாள்வரையிலும், சிலசமயங்களில் தவறுகிறவர்களாகவே காணப்படுவோம் என்பது முற்றிலும் உண்மையே. "*நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்*" (யாக்கோபு 3:2). நம்முடைய சகோதர சகோதரிகளின் (வேண்டுமென்றே செய்யப்படாத) தவறுகளைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு, அவர்களை மன்னித்துவிடுவதன் மூலம் நாம் அவர்களுக்கான அன்பை வெளிப்படுத்தலாம்.

7. நமக்கும், சகோதர சகோதரிகளுக்கும் இடையே நேர்மையான கருத்து வேறுபாடுகள் எழும்பலாம். ஒருவேளை அதை முழுவீச்சில் அனுமதித்துவிடுவோமேயானால், அது சண்டை சச்சரவிற்கு வழிநடத்திவிடும். முக்கியத்துவமற்றக் காரியங்கள்மீதும், இன்னுமாக சண்டையைத் தூண்டிவிடும் என்று நாம் அனுபவத்தில் அறிந்திருக்கும் காரியங்கள்மீதும், கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்த தவிர்த்துக்கொள்வதற்குரிய எல்லா நியாயமான பிரயாசங்களை எடுத்துக்கொள்வதன் மூலமும் சகோதர சகோதரிகள் மற்றும் சபைக்கான நம்முடைய அன்பை நாம் வெளிப்படுத்தலாம். "*ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள்*"

என்ற பவுல் அடிகளாரின் அறிவுரையின்படி நடந்துகொள்ள நாம் தாழ்மையோடு நாடவேண்டும். (2 கொரிந்தியர் 13:11)

8. சகோதர சகோதரிகளுக்கு நாம் எந்த ஊழியங்களைச் செய்தாலும், அது ஆவிக்குரியதாக அல்லது பூமிக்குரியதாக இருப்பினும், அவற்றைக் கர்த்தருக்குச் செய்ததுபோன்று முழுமனதுடன் செய்யவேண்டும். ***"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள் என்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்."*** (கொலோசெயர் 3:23-24)

கர்த்தருடைய ஜனங்களுக்குப் பணிவிடை செய்வது என்பது, இக்காலத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் மகா கனம் என்று கருதுவதன் மூலம், சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். ஊழியங்கள் தொடர்புடைய விஷயத்தில் இந்த இந்த வேலையைத்தான் செய்வேன் என்று காணப்படக்கூடாது. எந்தக் கனம் குறைந்த ஊழியங்களையும் செய்ய ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும். இயேசு: ***"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாய் இருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார்" என்று கூறியுள்ளார்.*** (மத்தேயு 20:27-28)

9. ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்புவதற்கும் (யூதா 20), "ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்குவதற்கும்" (1 தெசலோனிக்கேயர் 5:11), "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் ஏவும்படிக்கும்" நம்மால் முடிந்த யாவற்றையும் செய்வதன் மூலம், சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம்.

10. சகோதர சகோதரிகள் மீதான நம்முடைய அன்பு என்பது கண்ணியமானதாகவும், எளிமையானதாகவும், தூய்மையானதாகவும் இருக்க வேண்டும்; இன்னுமாக சகோதர சகோதரிகளுக்கு இடையே இருக்கவேண்டிய (அதாவது இருபாலினருக்கே உரிய) முறையான வெளிப்பாடுகளோடு மட்டுமே அன்பு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

11. அன்பு முழுமையாய் வளர்ந்திருக்கும்போது, இது தனக்குக் கனங்கள் வரும்போது மகிழ்வதைவிட மற்றவருக்கு கனங்கள் வருவதிலேயே அதிகமாக மகிழ்ச்சிகொள்ளும். "***சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்***; ***கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்.***" (உரோமர் 12:10)

12. நம்முடைய சகோதர சகோதரிகளுடைய தனிப்பட்ட குணாதிசயங்களை மதிப்புடன் ஏற்றுக்கொள்வதன் மூலம், நமது சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை வெளிப்படுத்தலாம். கனங்கள் கொடுக்கப்படுவதன்/ பாராட்டுகள் தெரிவிப்பதன் காரணமாக, ஒருவருக்குப் பாதகம்/ இடறல் ஏற்படுமாயின், அப்படியானவர்கள்மீது நாம் கனங்களைத்/ பாராட்டுகளைத் திணிக்கக்கூடாது; ஆனால் இன்னொரு பக்கத்தில், தங்களைக் குறித்துக் குறைவாய் எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கும், தயங்கும் சுபாவம் உள்ளவர்களுக்கும், அவர்களுக்கே உரிய வாய்ப்புகளும், அங்கீகாரமும் கொடுக்கப்படத்தக்கதாகவும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி அன்புகூருபவர்களாக இருப்போமானால், நாம் 1யோவான் 3:18-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, "***வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூருபவர்களாக***" காணப்படுவோம். நம்முடைய திராணிக்கு உட்பட்ட விதங்களில், கர்த்தருடைய சகோதர சகோதரிகள் யாவரையும் எல்லா விதங்களிலும் ஊக்குவிக்க/ முன்னுக்குக்கொண்டுவர/ ஆசீர்வதிக்க முயற்சிப்பதற்குரிய வாஞ்சையானது, நம் ஜீவியத்தின் **இலக்காக** வேண்டும். இப்படியான விதத்தில் 1யோவான் 3:16-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோன்று, இயேசுவைப் போலாகுவோம்; "***அவர்***

***தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்."***

13. பெலவீனர்களுக்கும், தயக்கம்கொண்டிருப்பவர் களுக்கும், அச்சம் கொண்டிருப்பவர்களுக்கும் மற்றும் போராடும் தன்மையையும், தன்னம்பிக்கையையும் குறைவாய்க் கொண்டிருப் பவர்களுக்கும், நமது அறிவுரைகள் மற்றும் முன்மாதிரியான நடத்தைகள் மூலம் உதவுவதன் வாயிலாக, நமது சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். ஆவிக்குரியவைகளில் பெலவீனர்களாய்க் காணப்படுபவர்களைப் பலமடையச் செய்வதன் மூலமும், கர்த்தருடைய வாக்குத்தத் தங்களைப் பற்றிக்கொள்ள அவர்களை ஊக்குவிப்பதன் மூலமும், அவர்கள் விஷயத்திலுள்ள தேவனுடைய வழிநடத்துதல்களை விசுவாசிப்பதற்கு அவர்களை ஊக்குவிப்பதன் மூலமும் நாம் அவர்களுக்கு உதவிசெய்யலாம்; "***திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடியசாந்தமாயிருங்கள்.***" (1 தெசலோனிக்கேயர் 5:14)

14. சகோதர சகோதரிகளுக்கான அன்பினால் நம்முடைய இருதயங்கள் நிறைந்திருக்குமானால், நாம் நம்முடைய சொந்தக் காரியங்களைப் பார்த்துக்கொள்வதற்கு, நம்முடைய அதிகமான நேரத்தைச் செலவிடுகின்றவர்களாகவும், அந்நிய காரியங்களில் தலையிடுவதற்கு நேரம் இல்லாதவர்களாகவும் காணப்படுவோம். தங்களுடையதல்லாத காரியங்களில் ஆர்வங்காட்டுபவர்கள், சீக்கிரத்தில் தங்கள் சொந்தக் காரியங்களைக் கவனியாது போகின்றவர்களாகிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் 1 தீமோத்தேயு 5:13-ஆம் வசனத்தில், பவுல் அடிகளார் விவரித்துள்ளதுபோன்று, "***சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல, அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரர்களாயும் தகாத காரியங் களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்.***" இப்படிச் செய்பவர்கள் தங்களுக்கு மாத்திரம் பாதகம் ஏற்படுத்திக்கொள்ளாமல்,

கிறிஸ்துவின் நோக்கங்களுக்கும் தீங்கு விளைவிப்பவர்களாய் இருந்துவிடுவார்கள். 1 பேதுரு 4:15-ஆம் வசனத்தில் எழுதியிருக்கின்றபடி, நம்மில் ஒருவனும், "*அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டு பாடுபடுகிறவனாயிருக்க*" கர்த்தர் விரும்புவதில்லை. ஒருவேளை மற்றவர்களுடைய தனிப்பட்ட விஷயங்களில் அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நமக்குச் சொல்ல (ஆசை) தோன்றும்போது நாம், "*அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடி, உங்கள் சொந்த அலுவல்களைப் பாருங்கள்*" என்ற அப்போஸ்தலனின் அறிவுரையை நினைவில்கொள்ள வேண்டும். (1 தெசலோனிக்கேயர் 4:12)

## நம்முடைய நாவை அடக்குதல்

15. நமது சகோதர சகோதரிகளை நாம் அன்புகூர வேண்டிய விதத்தில் அன்புகூருவோமானால், நம்முடைய நாவுகளை அடக்க "பெரும் பிரயாசங்களை" எடுக்கின்றவர்களாக நாம் இருப்போம். நிச்சயமாகவே இதை நாம் முற்றும் முழுமையாகச் செய்யமுடியாது, ஏனெனில், "*நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது*" என்றும், "*ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரண புருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்*" என்றும் யாக்கோபு அடிகளார் கூறியுள்ளார் (யாக்கோபு 3:8,2); எனினும் நம்மால் முடிந்த பிரயாசங்களை எடுத்தாக வேண்டும்.

16. ஒருவரையொருவர் குறித்த தீமைகளைக் கேட்க நேரிடும்போது, அதை உடனே நம்பாமல் இருப்பதன் மூலம் சகோதர சகோதரிகள் மீதான நமது அன்பை வெளிப்படுத்தலாம். அப்படிக் கேட்க நேரிடும்போது, **அதை நம்புவதைத் தவிர்க்கவே முதலில் முயற்சிக்க வேண்டும்**; நமது சகோதர சகோதரிகள் சொன்ன அல்லது செய்த ஏதேனும் காரியங்கள் ஒருவேளை கர்த்தருடைய சித்தத்திற்கு முரணானது என்று நமக்குத் தோன்றினாலும், அவர்கள் ஏதோ சில நல்ல எண்ணத்தில்தான் அதைச் செய்திருப்பார்கள் என்று நம் மனதில் காரணம் கற்பித்து, எப்போதும் சந்தேகப்படாமல் நம்பிக்கை வைக்கின்றவர்களாக

நாம் காணப்பட வேண்டும்; ஏனெனில், "*அன்பு தீங்கு நினையாது*" என்று பவுல் அடிகளார் கூறியுள்ளார் (1 கொரிந்தியர் 13:5). நம்முடைய விழுந்துபோன மாம்சத்தினுடைய பெலவீனத்தை அறிந்தவராக நமது ஆண்டவர், சபையில் தீமைபேசுதலைத் தவிர்க்கும் கட்டளை ஒன்றைக் கொடுத்துள்ளார். இதை நாம் மத்தேயு 18:15-16-ஆம் வசனங்களில் பார்க்கலாம்.

கிறிஸ்துவுக்குள்ளான சகோதரன் ஒருவன் இன்னொரு சகோதரனுக்குத் தீமைசெய்கின்றான் எனும் காரியத்தை உள்வாங்குவதற்கே சிரமமாகக் காணப்படுகின்றது; இன்னுமாக பாதிக்கப்பட்ட சகோதரனும் பதிலுக்குத் தீமையைச் செய்கின்றான் என்பது இன்னும் நம்பமுடியாத காரியமாகக் காணப்படுகின்றது. ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கவே செய்கின்றது! "***ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்போதும் நன்மைசெய்ய நாடுங்கள்.***" (1 தெசலோனிக்கேயர் 5:15)

ஒருவேளை சகோதரன் ஒருவன் தடுக்கி விழுந்து, தனக்கும், சபையிலுள்ள மற்றவர்களுக்கும் பாதகம் ஏற்படுத்து வானானால், அவன்பாலுள்ள நம்முடைய மனநிலையானது சகோதர சிநேகத்துடன் காணப்பட வேண்டும்; அவன் மீண்டும் சமநிலையை அடையவும், கர்த்தருடனான அவனது நிலையை அவன் மீட்டெடுக்கவும் நாம் உதவிசெய்ய வேண்டும்; **நாம்கூட இதேபோல் விழ வாய்ப்புண்டு என்ற எண்ணத்தை மனதில்கொண்டு, உதவிசெய்ய வேண்டும்.** "***சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு***" (கலாத்தியர் 6:1). ஒரு சகோதரனை கண்டிப்பது அல்லது கடிந்துகொள்வது அவசியம் என்ற தருணங்கள் வருகையில், நாம் சகல நியாயமான பொறுமையைக் கடைபிடித்த பிறகு மட்டுமே, அதைச் செய்யவேண்டும். அப்போதும்கூட அதை அன்பிலேயே செய்யவேண்டும். சகோதரன் மனம்வருந்தி, தனது தவறுகளை ஒப்புக்கொள்ளும்போது, ஊதாரி மைந்தனின் "தகப்பனைப்

போன்று" நாம் நடந்துகொள்ள வேண்டும்; அதாவது மனம் வருந்தினவன் தாழ்மையோடு வருவதை காணும்போது, நாம் போய் அவனை "வரவேற்க" வேண்டும்.

## பலமுறை மன்னித்தல்

17. ஒருவரையொருவர் **தொடர்ந்து மன்னிப்பதன்** மூலம் நமது சகோதர சகோதரிகளுக்கான அன்பை நாம் வெளிப் படுத்தலாம். இயேசு, பேதுருவிடம் கூறினவைகளை நினைவு கூருவோமாக; "***பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரமல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்***" (மத்தேயு 18:21-22). தனது சகோதரனை 490-முறை மன்னிக்கும் கட்டத்தைப் பேதுரு அடைந்திருக்கும்போது, மன்னிப்பு என்பது பேதுருவின் பழக்கமாகியிருக்கும் என்றும், அதன் பிற்பாடு எத்தனை முறை என்று கணக்குக்கூட்ட அவர் மறந்திருப்பார் என்றும் இயேசு அறிந்திருந்தார். நாமும் (எத்தனை முறை மன்னித்துள்ளோமென) கணக்குக்கூட்ட மறந்துபோவோமாக. நிச்சயமாகவே பரலோகத்தின் பிதா நம்மை 490-முறைக்கும் மிக அதிகமான முறைகள் மன்னித்திருக்கின்றார். **நாம் மறுரூபமாகுவதற்கு முன்புவரை, இன்னும் அநேகந்தரம் அவரிடம் மன்னிப்பு கேட்கவேண்டியது அவசியமாயிருக்கும் என்பதும் நிச்சயமே!**

18. "***நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்***" என்று வாசிக்கின்றோம் (1பேதுரு3:8). ஆவியில் இந்த ஒருமைப்பாட்டினை தக்கவைப்பதற்கென நாம் பிரயாசப்படுவதன் மூலம், நமது சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். நம்முடைய இந்தச் சிறந்த பிரயாசங்களையும் தாண்டி, கர்த்தர் அனுமதிக்கும் சோதனைகளில் சிலர் விழுந்துபோவார்கள்; பிரிவினைகள் உண்டாகவே செய்யும். "***உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்***

**குள்ளே உண்டாயிருக்கவேண்டியதே**" (1 கொரிந்தியர் 11:19). எனினும் இந்தப் பிரிவினைகளுக்கு **நாம்** காரணமாகாதிருப் போமாக! பிரிவினைகள் வருமாயின், அது வேறு எதன் மூலமாகிலும் வரட்டும்.

19. நம்முடைய சகோதர சகோதரிகளுக்காக ஜெபம் பண்ணுவதன் மூலம், அவர்களுக்கான அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். அவர்களுக்கு விசேஷித்த தேவை இருக்கின்றது என்பதை நாம் அறிய வரும்போது, விசேஷமாக அவர்களது பெயர்களையும், சூழ்நிலைகளையும் கிருபையின் சிங்காசனம் முன் குறிப்பிட்டு, ஜெபம்பண்ணலாம். இப்படி ஊக்கமாய் ஜெபம் ஏறெடுக்கப்படும்போது, அது கேட்கப்படும் என்று யாக்கோபு 5:16-ஆம் வசனத்தில் நமக்கு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

20. கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தின் ஊழியங் களுக்கு நம்மால் முடிந்த/முடியுமானால் பொருளாதார உதவிகளைச் செய்வதன் மூலமும், நம்முடைய சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். இது நமது அன்பை வெளிப்படுத்துவதற்குரிய மற்றுமொரு நடைமுறை சார்ந்த வழியாகவும், நேரடியான வழியாகவும் காணப்படுகின்றது; இவ்வழியின் மூலம் கர்த்தருடைய வேலையில் நேரடியாகப் பங்கெடுப்பதற்கும், அதேசமயம் தனிப்பட்ட விதத்தில் பங்கெடுப்பதற்கும் நமக்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

21. யார் தம்மை அதிகமாய் அன்புகூருகின்றார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு, பரம பிதா வழி ஒன்றை வைத்திருக்கின்றார். ஒருவரையொருவர் சந்திப்பதற்கு அல்லது தொடர்புகொள்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கும் இடங்களில், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களைப் பிதா வைக்கின்றார்; மேலும் அவர்கள் ஒருவரிலொருவர் காண்பிக்கும் அக்கறையின் மூலமும், ஒருவரோடொருவர் ஐக்கியம்கொள்வதற்கு வேண்டி

அவர்கள் ஏறெடுக்கும் பிரயாசங்களின் மூலமும், அவர்கள் **தம்மீது எவ்வளவு அன்பின் ஆவியினைப் பெற்றிருக்கின்றார்கள்** என்று அறிந்துகொள்கின்றார். *"தேவனிடத்தில் அன்புகூருகிறே னென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால்* (அதாவது வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், சகோதரனோடு தனிப்பட்ட ஐக்கியங்கொள்வதற்கு நாட முற்படுமளவுக்கு, அவனை அன்புகூர முடியவில்லையெனில்), *அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமல் இருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?"* (1 யோவான் 4:20)

22. நம்முடைய சகோதர சகோதரிகளிடம் நாம் கடுமையாய் நடந்துகொள்ளாததன் மூலம், அவர்களுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம்.

23. சகோதர சகோதரிகளினால் செய்ய முடிகின்றதைவிட அதிகமாய் அவர்கள் செய்யவேண்டுமென நாம் எதிர்பார்க்காமல் இருப்பதன் மூலம், அவர்களுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம்.

24. சகோதர சகோதரிகளுடைய திறமை குறைவுகளை/ஆற்றலின்மைகளை/மெதுவான வளர்ச்சியினை மதித்து உணர்ந்துகொள்வதன் மூலம் அவர்களுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம்.

25. மூப்பர் என்ற ஊழிய ஸ்தானத்தில் காணப்படுகின்ற சகோதரர்களுக்கு, அவர்கள் புதுச்சிருஷ்டிகள் என்ற விதத்தில் பாதிப்படைவதற்கேதுவான எதையும் நாம் செய்ய தவிர்ப்பதன் மூலம், அவர்களுக்கான நமது அன்பினை நாம் வெளிப் படுத்தலாம். அவர்களது ஊழியத்தைத் தடைபண்ணுகின்ற அல்லது அழித்துப்போடுகின்ற எதையும் செய்வதற்கு நாம் விசேஷமாய்த் தயக்கம் காண்பிக்கவேண்டும். மூப்பர்கள் என்பவர்கள் மந்தைக்கான மேய்ப்பர்களாகக் காணப்படு கின்றனர்; இப்படியாகவே கர்த்தர் அவர்களை ஏற்படுத்தி

யுள்ளார். அவர்களைத் தாக்கத்தக்கதாக எதிராளியானவன் அவர்கள்மேல் விசேஷமாய்க் "குறிவைத்துக்கொண்டிருக் கின்றான்." அவர்கள் குற்றஞ்சாட்டப்படுவதையும், அவமதிக்கப் படுவதையும், ஊழிய ஸ்தானத்திலிருந்து மாற்றப்படுவதையும் காணவிரும்புகின்றான். சபையில் மேய்ப்பர்கள் இல்லாமற்போனால், அவனால் சுலபமாக மந்தைக்குள் புகுந்து, ஆடுகளைத் தன் விருப்பத்தின்படி விழுங்கமுடியும். "*மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை, இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது*" (1தீமோத்தேயு 5:19). இந்த அறிவுரையானது கவனமாய் செவிசாய்க்கப்பட வேண்டும்.

26. நம்மைச் சார்ந்திருப்பவர்களின் தேவைகளைச் சந்திப்பதின் மூலம், நமது சகோதர சகோதரிகளுக்கான அன்பை நாம் வெளிப்படுத்தலாம். எல்லாக் காரியங்களிலும் தன் இஷ்டப்படி ஒரு புதுச்சிருஷ்டியால் செயல்பட முடியாது என்பதை புதுச்சிருஷ்டிகள் கற்றுக்கொள்ள வேண்டும். சில காரியங் களில், நாம் மாம்சத்தினுடைய கடமைகளை நிறைவேற்ற கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். அப்படிப்பட்ட கடமைகளில் ஒன்று, கர்த்தர் நம் பராமரிப்பின்கீழ் வைத்துள்ள குடும்பத்திற்கடுத்த காரியங்களாகும். இக்காரியத்தினை நாம், "கர்த்தருக்குச் செய்கிறதுபோல்" செய்ய வேண்டும். நமது விசுவாசத்தின்படி, இது அவசியமாகும். "*ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசி யிலும் கெட்டவனுமாயிருப்பான்.*" (1 தீமோத்தேயு 5:8)

27. நம்மைப்போன்றே ஒரே விசுவாசத்தில் காணப் படுபவர்களைச் சந்திப்பதற்கான நமது ஆர்வத்தின் மூலம், நமது சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். அக்கினி-தணல்கள் போன்று இருக்கின்ற நாம், ஒருவேளை தனித்தனியே இருப்போமானால், குளிர்ச்சியடைந்து போய்விடுவோம்; ஒருவேளை ஒருமித்துக்

கூடிக் காணப்படுவோமானால், ஒட்டுமொத்த அனலும் அதிகரிக்கும். நம்மைப்போலவே நீதிமானாக்கப்பட்டவர்களும், அர்ப்பணம் பண்ணிக்கொண்டவர்களும், கர்த்தரை அன்பு கூருகின்றவர்களும், கிறிஸ்துவின் ஈடுபலியில் விசுவாசம் கொண்டவர்களுமாகிய யாவரும் ஒன்றுகூடும்படிக்கு ஊக்குவிக்கப் கப்படுகின்றோம். **இப்படிக் கூடிக்கொள்வது என்பது, உலகத்தை ஜெயிப்பதற்கும், நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கும் பெரிதும் உதவியளிக்கின்றதாய்க் காணப்படும்.** இப்படியான கூடுகைகளில் காணப்படும்போது, நாம் நல்ல தோழமையை அடைகின்றோம்; *"ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்"* என்று இயேசு கூறியுள்ளார். இப்படிக் கூடிக்கொள்ளும்போது, "வானத்தின் வாசலோடு" தொடர்பு ஏற்படுகின்றது (ஆதியாகமம் 28:17). *"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்"* என்ற வசனத்தின்படி செய்வோமானால், நமது சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். (எபிரெயர் 10:25)

28. நம்முடைய வருமானத்திற்குள் வாழ்க்கையை நடத்துவதன் மூலம், நம்முடைய சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். கர்த்தருடைய ஜனங்கள் அவரவர் வருமானத்திற்கு மிஞ்சி வாழ்ந்துவிட்டு, தரித்திரத்தை ஏற்படுத்திக்கொண்டு (paupers), மற்றவர்களைச் சார்ந்திருக்கும் நிலையில் இருக்கக்கூடாது. *"ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்."* (உரோமர் 13:8)

29. கர்த்தருடைய மந்தையைப் போஷிப்பதன் மூலம், நமது கர்த்தர் இயேசு மற்றும் நமது சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பினை நாம் வெளிப்படுத்தலாம். இப்படிச் செய்து, பேதுரு தனது அன்பை நிரூபிக்கும்படியாக, அவரிடம் இயேசு கூறினார். கர்த்தருடைய மந்தையைப் போஷிப்பது என்பது, சபையின் மூப்பர்களுக்கு மாத்திரமே உரிய சிறப்புரிமையல்ல; இதைச் சபையார் யார் வேண்டுமானாலும் செய்யலாம், அதாவது **ஆவிக்குரிய காரியங்களைப்பற்றியும், பிரயோஜனமான கருத்துகளைப் பற்றியும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உரையாடுவதன் மூலம்,** இப்படி (ஒருவரையொருவர்) போஷித்து நாம் எப்போதும் ஆண்டவரை நினைத்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்தலாம். தேவன் இதுபோன்ற உரையாடல்களைக் கேட்டு, அவற்றை ஞாபக புத்தகத்தில் பதிவு செய்துவருகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? இப்படியாக அவர் தம்முடையவர்களை அடையாளங்கண்டு கொள்கின்றார். (மல்கியா 3:16-17)

## அன்பு, சமாதானத்தைக் கொண்டுவருகின்றது

அன்பு இப்படியான விதங்களில் செயல்படும்போது, அதற்கு நிஜமாகவே வல்லமை காணப்படும். அது சபையில் சமாதானத்தைக் கொண்டுவருகின்றது; மேலும் நம்முடைய மனங்களிலும் சமாதானத்தைக் கொண்டுவருகின்றது. அது சாத்தானின் தாக்குதல்களுக்கு எதிராக, ஒரு சுவரை எழுப்பிவிடுகின்றது. அது ஆரோக்கியமான உபதேசத்தை ஆதரித்து, நிலைநாட்டுகின்றது. அது நம்மைக் கிறிஸ்துவுக்கொத்த சாயலாக்குகின்றது மற்றும் தேவனுக்கொத்த சாயலாக்குகின்றது. இந்த வல்லமை மூலம், தேவன் உலகத்திலுள்ள பைத்தியக்காரர்கள், உலகத்திலுள்ள பெலவீனர்கள், உலகத்திலுள்ள இழிவானவர்கள், உலகத்திலுள்ள அற்பமானவர்கள், ஒன்றுமில்லாதவர்கள் மத்தியிலிருந்து 1,44,000 பேரைத் தெரிந்தெடுத்துக் கொள்கின்றார்; ஒன்றுமில்லாத நிலையினின்று இவர்களை வளர்த்தி, ஜீவனின் உயர் நிலைக்கு, அதாவது மகிமையான திவ்விய சுபாவ நிலைக்கு உயர்த்துகின்றார். இதுவே நம்மில் கிரியை

செய்துகொண்டிருக்கின்ற நிஜமான வல்லமையாக இருக்கின்றது; இது கொலோசெயர் 1:11-12-ஆம் வசனங்களில் விவரிக்கப் பட்டுள்ள வல்லமையாகும்; "*. . . தம் வல்லமையால் . . . அவர் இறைமக்களுக்கான ஒளிமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற நம்மை தகுதியுள்ளவர்களாக்கியுள்ளார்.*" (திருவிவிலியம்)

நாம் நம்முடைய சகோதர சகோதரிகளுக்கான அன்பினை எந்தெந்த விதங்களில் வெளிப்படுத்த விரும்பினாலும், இன்னுமாக கர்த்தருடைய சரீரத்தின் அங்கத்தினர்களுக்குத் திரையின் இப்பக்கத்தில் எவற்றைச் செய்ய விரும்பினாலும், **அதை விரைவாய்ச் செய்ய வேண்டும்**; ஏனெனில் அவர்கள் நீண்ட காலம் இங்கு இருக்கப் போவதில்லை. கர்த்தருடைய தலையின்மீது நறுமணத் தைலமுள்ள பரணியை அடுத்த வாரம் உடைத்து ஊற்றலாம் என்று மரியாள் ஒருவேளை காத்திருந்திருப் பாளானால், அவர்மீது ஊற்றுவதற்குரிய வாய்ப்பு அவளுக்குக் கிடைக்காமலேயே போயிருந்திருக்கும்; ஏனெனில் அவர் உடனே சிலுவையில் அறையப்பட்டு மரித்துப்போனார். எழுத்தாளர் ஒருவர் கூறும்போது: **உங்களுடைய நண்பர்கள் மரிப்பதுவரையிலும் அன்பும், இரக்கமும் உள்ள உங்கள் வெள்ளைக்கல் பரணியை முத்திரையிட்ட நிலையிலேயே வைத்துவிடாதீர்கள்! அவர்கள் இறந்துபோன பின்னர், அவர்களது சவப்பெட்டிக்கு நீங்கள் வைக்கும் "மலர்களால்," (அவர்கள் உயிரோடு இருந்தபோது) பாடுகளாலும், துன்பங்களாலும் நிறைந்திருந்த அவர்களது பாதைக்கு எந்த ஆறுதலாகிய மணத்தையும் வீச முடியாதே!**

கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஏதோ ஓர் அங்கத்தினனுக்கு "இன்று" "கடைசியான" அன்பின் ஒரு வார்த்தையைப் பேசும் அல்லது உதவியைச் செய்யும் சிலாக்கியம் உங்களுக்குக் கிடைக்கலாம்! ஆகையால் தாமதிக்காதீர்கள்! நம்மில் கிரியை செய்துகொண்டிருக்கும் இந்த மகத்துவமான தேவனுடைய வல்லமைக்கு நம்மை நாம் முழுமையாக ஒப்புக்கொடுத்து, பரிசுத்த ஆவியின் கனியாகிய அன்பை அதிகமதிகமாகக் கொணரு வோமாக!

ஆமென்!!

- சகோ. Robert. S
(தமிழாக்கம்)

# புதுச்சிருஷ்டிக்கான சிந்தனை துளிகள்

## (பிப்ரவரி - செப்டம்பர் 2024)

# ஒரு தேவசெய்தியை எந்த மனநிலையில் கேட்பது?

- விமர்சிப்பதற்கென்று தேவசெய்தியைக் கேட்கும் நபராய் இராதே.
- இலக்கணங்களிலும், சைகைகளிலும் மற்றும் விவரிப்புகளிலும் வெளிப்படும் பிழைகளைக் கண்டுபிடிப்பதற்கென்று விழிப்பாய் இராதே.
- பிழைகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, மற்றவர்மீது வீசும் நபராய் இராதே.
- பரிசேயனைப்போன்று, "கையும் களவுமாய்ப்பிடிக்க வேண்டும்" என்ற நோக்கத்தில், தேவசெய்தியில் பிழைகளைத் தேடும் வேட்டைக்காரனாய் இராதே.
- வழங்கப்படும் தேவசெய்தி, யார் யாருக்குப் பொருந்தும் என்று மற்றவர்களுக்குப் பொருத்தம் பார்க்கின்றவனாய் இராதே.
- விமர்சிப்பதற்கென்று தன்னைத்தானே நியமித்துக் கொண்ட விமர்சகனாய் இராதே.
- தேவசெய்தியில் சொல்லப்பட்டுள்ள எல்லாவற்றையும் (ஆம் என்று) ஒப்புக்கொண்டாக வேண்டும் என நீயாகவே கற்பனை செய்துகொள்ளாதே.
- தேவசெய்தி உனக்குப் பிரயோஜனம் உண்டாக வந்துள்ளதே, ஒழிய, உன்னை சிரிப்பூட்டி மகிழ்விப்பதற்காக அல்ல. நீ இன்னும் சிறந்த நபராகுவதும், வளருவதும்தான் அதன் நோக்கமாகும்.
- ஜெபத்துடனும், காத்திருப்புடனும், உன் மனதை ஆயத்தப்படுத்தி, பாடத்தைக் கேள்.
- பரிவுள்ள மனதுடனும், திறந்த மனதுடனும் பாடத்தைக் கேள்.

- செய்திகொடுப்பவர் உன்னைவிட சிறந்தவர் என்று எண்ணம்கொண்டவனாக, தாழ்மையான மனதுடன் தேவசெய்தியைக் கேள்.
- உன்னுடைய தப்பெண்ணங்களைச் சரிசெய்யலாம் என்ற எதிர்பார்ப்பில் பாடத்தைக் கேள்.
- உனக்கு உதவியாகக் காணப்பட வாய்ப்புள்ள கருத்துகளையும், வசனங்களையும் மற்றும் பாடங்களையும் உனக்கு நீயே நினைப்பூட்டிக்கொள்.
- எந்த ஒரு பேச்சாளனும், தான் பேசவேண்டும் என்று நினைத்திருந்தவைகளையெல்லாம், தேவசெய்தியில் முழுமையாகப் பேசமுடிகிறதில்லை என்பதை நினைவில் கொள்.
- ஒரு தேவசெய்தியானது ஜெபத்தோடு உள்வாங் கப்பட்டால், இன்னுமாக ஜெபத்துடன் செவிகொடுத்து கவனிக்கப்பட்டால், இன்னுமாக திறந்தமனங்களுடனும், பரிவுள்ள, தாழ்மையுள்ள, பரஸ்பரமுள்ள மற்றும் நீர்ப்பாய்ச்சப்பட்ட மனங்களுடனும் கேட்கப்பட்டால் . . . அது அநேக ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும்.

- Religious Digest
The Herald Magazine, 1949

**02** **01,மார்ச் 2024**

## காலணிக்கும் மணல்

சான் பிரான்சிஸ்கோவிலிருந்து, நியூயார்க்கிற்கு நடைப்பயணமாகச் சென்ற ஒரு மனுஷன் பின்வருமாறு கூறியுள்ளார். அம்மனுஷன் தனது அனுபவத்தைக்குறித்துப் பகிர்ந்துகொண்டபோது, உயர்ந்ததும் கடினமானதுமான இராட்சத மலைகளை, தான் ஏறி கடந்துவந்தது தனக்கு மிகவும்

கடினமான அனுபவமாக இருக்கவில்லை என்றார்; இன்னுமாக நீண்ட பரப்பளவிலும், மிகுந்த வெப்பத்துடனும் காணப்பட்ட பாலைவனத்தில் நடந்ததோ அல்லது பெருக்கெடுத்து ஓடும் ஆறுகளையும், நீரோடைகளையும் கடந்ததோ தனக்குக் கடினமான அனுபவமாக இருக்கவில்லை என்றார். ஆனால் தன்னைக் கிட்டத்தட்ட தோற்கடித்தது, தனது காலணிக்குள் (செருப்பிற்குள்) புகந்த மணல்தான் என்றார்.

வாழ்க்கையில் நமக்கு வெளியிலிருந்து வரும் பிரச்சனைகள்/சவால்கள், நம்மை ஜெயிக்கும் அல்லது நம்மை வீழ்த்தும் சத்துருக்களல்ல; மாறாக நம்மை எரிச்சலூட்டி, நமக்கு மனஉளைச்சல் உண்டாக்கும் மணல் துகள்கள்போன்று காணப்படும் சிறிய விஷயங்களே நமக்கான சத்துருக்களாகக் காணப்படுகின்றன. நமது வெற்றி அல்லது தோல்வியை நிர்ணயிப்பது வாழ்க்கையின் சந்தர்ப்பச்சூழ்நிலைகள் அல்ல, மாறாக வாழ்க்கையை நாம் எதிர்கொள்ளும் மனநிலையினா லேயே நிர்ணயிக்கப்படுகின்றது.

நம்முடைய வாழ்க்கை பயணத்தில், நாம் அனைவரும் சில கடினமான சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். "சிரமங்கள்" எனும் மலைகளை நாம் ஏறவேண்டியிருக்கும்; "ஏமாற்றம்" எனும் நெருப்பான பாலைவனங்களை நாம் கடக்கவேண்டியிருக்கும்; "எதிர்ப்புகள்" எனும் ஆறுகளை நாம் தாண்டி கடந்துபோக வேண்டியிருக்கும். ஒருவேளை சரியான மனப்பான்மையும், சரியான ஆவியும் நம்மிடத்தில் இருக்குமானால், பிரயாணத்தை நாம் வெற்றிகரமாக முடிப்பவர்களாக இருப்போம். சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில், நாம் எதிர்கொள்ளும் "விஷயங்கள்" அல்ல, மாறாக அவற்றை நாம் **"எதிர்கொள்ளும் விதமே"** உண்மையில் முக்கியமானதாகும். காலணிக்குள் (செருப்பிற்குள்) மணல் புகாமல் பார்த்துக்கொள்வோமானால், வெற்றிகரமாக நடந்துசெல்ல முடியும்.

- Harold N. Geistweit
Devotions, Bible Student's Library

# கீழ்ப்படிதல்

இன்றைய தினம் என்பது ஒரு மெல்லிய பாலம் போன்றது; அதற்கு அதன் சுமையை மட்டுமே சுமக்கமுடியும்; அதன்மேல் நாளைய தினத்தின் சுமையைக் கூட்டுவோமானால், அது உடைந்துபோய்விடும். ஒவ்வொரு வருடமும் முந்நூற்று அறுபத்து ஐந்து கடிதங்கள் இராஜாவிடமிருந்து நமக்கு வருகின்றன. அவை ஒவ்வொன்றும், "எனக்காக இதைச் சகித்துக்கொள்" என்ற செய்தி எழுதப்பட்ட கடிதங்களாகக் காணப்படுகின்றன. இந்தக் கடிதங்களை நாம் என்ன செய்வது? ஒவ்வொரு நாளும் அந்தந்த நாளுக்குரிய கடிதத்தைப் பிரித்துப்படியுங்கள். நேற்றைய தினத்தினுடைய கடிதத்தின் முத்திரை உடைத்தாயிற்று; அதைப் பணிவாய் அப்பால் வைத்துவிடுங்கள். நேற்றைய தினத்தின் சிலுவை கீழே இறக்கிவைத்தாயிற்று, அதை மீண்டும் சுமக்கவேண்டியதில்லை. நாளைய தினத்திற்கான கடிதம் மேஜையில் காணப்படுகின்றது; அதன் முத்திரையை இன்றே உடைத்துத் திறக்கவேண்டாம். சிலசமயங்களில், நாளைய சிலுவை இன்றைக்குரிய சிலுவையாக மாறும்போது, கண்களுக்குப் புலப்படாதவராக அவர் நம் அருகில் வந்து நின்று, தம் கரங்களை நம் கரங்கள்மீது வைத்து, நம்மைக் கருத்தூன்றிப்பார்த்து, அன்புகலந்த புன்னகையோடு அவர், **"உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும்"** என்று கூறுவார்.

வாழ்க்கையின் இலக்கணம்/பொருள் பின்வருமாறு:

**"கடந்தகாலத்தை நன்றியுணர்வோடு நினை;**
**நிகழ்காலத்தைச் சேவையினால் நிறை;**
**எதிர்காலத்தை நம்பிக்கையினால் தொடர் . . ."**

*- 1911 Convention Report*
Bible Student Archives

# களைப்பாக காணப்பட்ட பாஸ்டர்

1913-ஆம் வருடத்திற்குரிய மாநாடு அறிக்கையில், பாஸ்டர் ரசல் குறித்த இரண்டு சாட்சிகள் சகோ. Hirsch-அவர்களினால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவர் தெரிவித்ததாவது:

*முதல்சாட்சி*: "ஒன்று செய்கிறேன். . .;" "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" (பிலி. 3:13; 1 கொரி. 2:2). மேற்கூறப்பட்டுள்ள வசனங்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாக நம்முடைய அருமை மீட்பரும், நமது அன்புக்குரிய பாஸ்டர் ரசல் அவர்களும் திகழ்ந்துள்ளனர்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு, பிட்ஸ்பர்க் நகரில் காணப்பட்ட பாஸ்டர் ரசல் அவர்களின் அலுவலகத்தில், அவர் அமர்ந்து படிக்கும் அறைக்குள் நான் (சகோ. Hirsch) நுழைந்தது எனக்கு ஞாபகத்தில் இருக்கின்றது. பணிபுரிந்துகொண்டிருந்த அவர் தலையைத் தூக்கி, அழகாகப் புன்னகைத்தார்; முகத்தில் களைப்பு தெரிந்தாலும், அம்முகத்தில் புன்னகை மலர்ந்தது. பின்னர் நான்: "இன்று மதியம் நீங்கள் களைப்பாக இருப்பதுபோன்று தெரிகின்றதே" என்றேன். பாஸ்டர் ரசல் பொதுவாக ஒப்புக்கொள்ளமாட்டார்; ஆனால் அன்று, "நான் களைப்பாகத்தான் இருக்கின்றேன்" என்றார். மேலும் அவர்: "சாதாரணமான களைப்பல்ல, என்னுடைய தசைகள்/உடல் முற்றும் முழுவதும் களைப்படைந்துள்ளது; எனது தசைகள்/உடல் மட்டுமல்ல, எனது எலும்புகளும்கூட முற்றும் முழுவதும் களைப்படைந்துள்ளது; ஆனாலும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது வரையிலும், நான் ஓய்வெடுக்கப்போவதில்லை" என்றார்.

பிற்பாடு இதைக்குறித்து நான் (சகோ. Hirsch) உட்கார்ந்து யோசித்துப்பார்த்தபோது அழுதேன். அவரது தசைகள்/உடல் முற்றும் முழுவதும் களைப்படைந்துள்ளதாம் . . . அவரது

எலும்புகளெல்லாம் முற்றும் முழுவதும் களைப்படைந்துள்ளதாம் . . . ஆனாலும் அவர் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்வரை ஓய்வெடுக்கமாட்டார் என்று கூறினார். நான் ஒருபோதும் இப்படியாகவெல்லாம் களைப்படைந்ததில்லை; ஒருவேளை அந்த அளவுக்குக் களைப்படைவேனாகில், விடுமுறை/விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் நான் எண்ணியிருந் திருப்பேன். உண்மையைச் சொல்லப்போனால், நான் சிலநாட் களுக்கு முன்புதான் விடுப்பு எடுத்திருந்தேன். நான் சற்று ஓய்வெடுக்கவேண்டிய நிலையில்தான் காணப்பட்டேன்; நான் சரீரத்திலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சோர்வுடன் இருந்தபோதிலும், உடனே ஊழியத்திற்குத் திரும்பிவிட்டேன். திரையின் இப்பக்கத்தில், நான் காணப்படுவதுவரையிலும், நான் இனிமேலும் விடுப்பு என்ற ஒன்றை எடுக்கமாட்டேன் என்று தீர்மானம் எடுத்துக்கொண்டேன். நிச்சயமாகத் திரையின் மறுபக்கத்திலும் ஓய்வு எடுக்கப்போவதில்லை.

***இரண்டாம் சாட்சி***: "பாஸ்டர் ரசல் அவர்கள் ஓய்வே எடுக்காமல், அதிகாலை முதல், இரவு 11 மற்றும் 12 மணி வரையிலும் ஊழியங்களை ஆற்றும் சகோதரன் ஆவார். மேலும், தான் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றியுள்ளார் என்ற ***நிச்சயம்*** ஏற்பட்டாலேயே ஓய்வெடுத்து உறங்குவார்."

இச்சாட்சியினை நிறைவுசெய்த பிற்பாடு சகோ. Hirsch- அவர்கள் தொடர்ந்து தெரிவித்ததாவது: "ஒருவேளை நம்மால் இரவு நேரம் தூங்க முடியவில்லையெனில், ஒருவேளை அந்த நாளில் நாம் கர்த்தருடைய சித்தத்தைச் செய்யாமல் இருந்ததுகூடக் காரணமாக இருக்கலாம். நாம் அனைவரும் மகிமையின் மகா இராஜனை இவ்வுலகத்திற்கு அறிமுகம் செய்கின்றவர்கள். இது எத்துணை மாபெரும் சிலாக்கியம்! மேலும், நம்முடைய கைகளுக்கு அகப்படுவது எதுவோ, அதை முழுப்பெலத்துடன் செய்யவேண்டியவர்களாய் இருக்கின்றோம்!"

- 1913 Convention Report

# கர்த்தர் கற்பித்த ஜெபம்

- பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக் காதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"பரமண்டலங்களிலிருக்கிற"** என்று . . .
- எனக்காக மட்டும் வாழ்பவனாக நான் இருப்பேனேயாகில் ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"எங்கள்"** என்று . . .
- பிதாவின் பிள்ளையெனச் செயல்பட ஒவ்வொரு நாளும் பிரயாசங்கள் எடுத்துக்கொள்ளாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"பிதாவே"** என்று . . .
- பரிசுத்தமாய் ஜீவிப்பதற்கு நாடாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக"** என்று . . .
- இராஜ்யம் வருவதற்காக என்னால் செய்யமுடிந்த காரியங்கள் அனைத்தையும் செய்யாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"உம்முடைய இராஜ்யம் வருவதாக"** என்று . . .
- அவரது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக"** என்று . . .
- இங்கு, இப்பொழுது அவருக்கு ஊழியம் செய்யாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"பரமண்டலத்தில் செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக"** என்று . . .
- வேறு ஆதாயங்களுக்காக/காரியங்களுக்காக வஞ்சகமாய் அல்லது தந்திரமாய் நாடுபவனாக நான் இருப்பே னேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"எங்களுக்கு**

**வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்"** என்று . . .

- ஒருவருக்கு விரோதமாக பகையை மனதில் வைத்துக் கொண்டிருப்பவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்"** என்று . . .
- தீமையின் பாதையில் நானே போய் நின்றுகொண்டிருப் பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்"** என்று . . .
- தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்து கொள்ளாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்"** என்று . . .
- உண்மையுள்ள குடிமகனென இராஜாவுக்குக் காண்பிக்கப் பாத்திரமான நேர்மையினைக் கொண்டிராதவனாக நான் இருப்பேனேயாகில்,ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"இராஜ்யம் உம்முடையது"** என்று . . . .
- மனுஷன் என்ன செய்துவிடுவானோ என்று அஞ்சுபவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **" வல்லமை உம்முடையது "** என்று . . .
- எனக்காக மட்டும் மகிமையினைத் தேடிக்கொள்பவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"மகிமை உம்முடையது"** என்று . . .
- எனது வாழ்க்கையினை, என் கால வரையறைக்குள் முழுவதும் அடக்கிக்கொள்பவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: **"என்றென்றைக்கும் உம்முடையவைகளே"** என்று . . .

- Devotions
Bible Student's Library

# ஜெபத்தின் வல்லமை

பறவையானது மரக்கிளையில் அமர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில், அது கீழே விழுவதில்லை! இதை நீங்களும் கவனித்திருப்பீர்களல்லவா? பறவையினால் எப்படிக் கீழே விழாமல் இப்படிக் காணப்பட முடிகின்றது?

பறவையின் கால்களில் காணப்படும் தசைநார்களிலேயே **இரகசியம்** காணப்படுகின்றது. பறவைகள் அதன் முழங் கால்களை மடக்கும்போது, அதன் நகங்கள் இரும்பு கொக்கிபோல் கிளையினை இறுக்கமாகப் பற்றிக்கொள்ளும் வகையில், அதன் தசைநார்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன; மேலும் பறவையானது அதன் முழங்கால்களை நீட்டி நிமிர்த்தும்வரை, இந்த நகங்கள் அதன் இறுக்கமான பிடியினைத் தளர்த்துவதில்லை. **வளைந்து மடிந்திருக்கும் முழங்கால்களே,** கிளையினை மிகவும் இறுக்கமாகப் பற்றிப்பிடித்திருக்கும் திறனை பறவைக்குக் கொடுக்கின்றதாக இருக்கின்றது.

நமக்கு மிகவும் விலையேறப்பெற்றவைகளாகக் காணப்படும் நேர்மை, பரிசுத்தம், விவேகம், கண்ணியம், நற்பண்புகள் போன்றவைகளை எப்படி உறுதியாகக் கடைபிடித்து காத்துக்கொள்வது என்பதைத் தூங்கும் பறவையிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். வாழ்க்கைதனை அர்த்தமுள்ளதாக்கும் இந்த விலையேறப்பெற்ற பண்புகளை உறுதியாய்க் கடைபிடிப்பதற்கு, **முழங்கால் மடக்கி ஜெபம்பண்ணுவதே** அந்த இரகசியமாகக் காணப்படுகின்றது. ஜெபத்தில் தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்வோமேயானால், அவர் நம்மைக் கைவிடாமல் காப்பாற்றுவார் என்று நாம் நிச்சயம்கொள்ளலாம்.

"***கர்த்தரையும், அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.***" (சங்கீதம் 105:4)

- The Herald Magazine, 2003

# பலியின் மரணமா அல்லது உண்மையான மரணமா?

**Q221 : 1**

**கேள்வி** (1916) - 1 - சங்கீதம் 116:15 - "***கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.***" இவ்வசனத்தில், தினந்தோறும் பரிசுத்தவான் அனுபவிக்கும் பலியின் மரணம்குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றதா அல்லது பரிசுத்தவானுடைய உண்மையான மரணம்குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றதா?

**பதில்:** இவ்வசனத்தின் விஷயத்தில் நாம் வாக்குவாதம் செய்யவேண்டியதேயில்லை. பரிசுத்தவான் சம்பந்தப்பட்ட **அனைத்து விஷயங்களுமே** தேவனுக்கு விலையேறப் பெற்றவையாகக் காணப்படுகின்றது. பரிசுத்தவான் தன்னை அர்ப்பணம்பண்ணும் தருணமானது, தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாகக் காணப்படுகின்றது. முதல் பரிசுத்தவானாகிய இயேசு தம்மை அர்ப்பணம்பண்ணினபோது, அது தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாய்க் காணப்பட்டது; அத்தருணத்தில் இயேசுவின்மீது பரிசுத்த ஆவியினை பிதா இறங்கிவரப்பண்ணி, அவர் தேவனுடைய குமாரன் என்று அறிக்கைபண்ணினார். நாம் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும்கூடத் திவ்விய தயவும், ஆசீர்வாதமும் நமக்குக் காணப்படும்; ஏனெனில் பரிசுத்தவான் சம்பந்தப்பட்ட **அனைத்துக் காரியங்களுமே** தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவையாகக் காணப்படுகின்றது. அர்ப்பணிப்பும், இப்படி அன்றாடம் மரித்தலும், இன்னுமாக இறுதியில் உண்மையாக மரித்தலுமாகிய இவைகள் **அனைத்துமே** பிதாவுக்கு விலையேறப்பெற்றவையாகக் காணப்படுகின்றன. இப்படிச் செய்பவர்கள் அனைவருக்கும், அவர் மகா பலனை அருளவிருக்கின்றார்; ஆகையால் இத்தகையவர்கள் அவர் பார்வையில் விலையேறப் பெற்றவர்களாகவே இருப்பார்கள்.

- பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

# மனித சுபாவம் ஆறுதல் பெற ஏங்குமா?

**Q334 : 1**

கேள்வி: (1908) - 1 - மற்றவர்களின் ஆறுதலுக்காக ஏங்குவது என்பது மனித சுபாவத்தினுடைய இயல்பா? இப்படியாக இருக்குமானால், ஒருவேளை மற்றவர்களிடம், இன்னும் சொல்லப்போனால் கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள மற்ற உடன் அங்கத்தினர்களிடம்கூட நம்முடைய பிரச்சனைகளைக்குறித்துச் சொல்வதைத் தவிர்த்துக்கொள்வது என்பது, தேவனிடத்தில் நம்மை நெருக்கமான உறவிற்குள் கொண்டுவந்து, அவருடைய புயங்கள்மீது மட்டும் நாம் சார்ந்திருக்க உதவுமா?

பதில்: கேள்வியினுடைய முதல் பாகத்திற்கு ஆம்! என்று நான் பதிலளிக்கின்றேன். நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்தமட்டும் அவரவர் பாரங்களைச் சுமக்க நாடவேண்டும் என்றும், இதோடுகூட மற்றவர்களின் பாரங்களையும் சுமக்க நாடவேண்டும் என்றும் அப்போஸ்தலனின் அறிவுரைக் காணப்படுகின்றது. தனக்கென்றுள்ள சொந்தப் பாரங்களைப் பெற்றிருக்கும் ஒருவன், அவைகளைச் சுமப்பதற்கு முயற்சிக்கின்றவனாகவும், அதற்குக் கர்த்தருடைய ஒத்தாசையைப் பெற நாடுகின்றவனாகவும், அதேசமயம் மற்றவர்களுக்கும் அவர்களது பாரங்களின் விஷயத்தில் உதவுவதற்கு நாடுகின்றவனாகவும் மற்றும் இதற்கு முன்வருபவனாகவும் இருக்கும்போது, இதனிமித்தம் அவன் தனது பாரங்கள் மிகவும் இலகுவாக இருப்பதையும், ஆசீர்வாதமாக இருப்பதையும் உணர்வான். ஆகையால் நம்மில் ஒவ்வொருவரும் அவரவர் பாரங்களைக் கூடுமானமட்டும் சுமப்பதற்கு நாடுவதும், பின்னர் வேறு யாருக்கேனும் உதவுவதும் நமக்கான தகுதியான மனநிலையாகக் காணப்படுகின்றது; இன்னுமாக நம்முடைய பாரங்களைக்குறித்து அதிகமாய் யோசித்துக் கொண்டேயிருந்து, அதில்தானே மூழ்கிப்போகாமல் இருக்கவேண்டும்; நமக்குத்தான் எல்லாக் கஷ்டங்களும், எல்லாப் பிரச்சனைகளும், எல்லாப் பாரங்களும் காணப்படுகின்றன என்று

கற்பனை பண்ணிக்கொள்ளாமல் இருந்து, நம்மைச் சுற்றி எத்தனை ஜனங்கள் பிரச்சனையில் காணப்படுகின்றனர் என்று சுற்றிப் பார்க்கவேண்டும்; இப்படிப் பார்ப்பீர்களானால், உங்களைவிட அதிகமான பாரங்களை உடையவர்களாக அநேகர் இருப்பதைக் காண்பீர்கள். ஆனால் இப்படிப் பார்ப்பதற்குமுன்பு, உங்கள் பிரச்சனைதான் மிகப்பெரிய பிரச்சனைபோல் உங்களுக்குத் தோற்றமளித்திருக்கும். ஆனால் அதற்கென்று உங்களுக்கோ, எனக்கோ மற்றவரிடமிருந்து ஆறுதல் ஒருபோதும் கிடைக்காது என்று நான் (சகோ. ரசல்) சொல்வதாக புரிந்துகொள்ளக்கூடாது; மாறாக இப்படி நாம் நடந்துகொள்ளும் போது, நாம் முன்புபோல் (மற்றவரிடமிருந்து) ஆறுதலுக்காக எதிர்பார்த்திருக்கமாட்டோம்; நம்முடைய பாரங்களை நாமே சுமக்க நன்கு முயற்சி செய்துகொண்டிருப்போம். இப்படி நாம் அங்கும் இங்குமாக ஆறுதலைத் தேடாமல் இருந்தாலும், கர்த்தர் நமக்கு சில ஆறுதல்களை அளிக்கக்கூடிய யாரோ ஒருவரை அநேகமாக அனுப்பிவைப்பார். எந்த விதத்தில் ஆறுதல் வந்தால் நல்லது என்று கர்த்தர் காண்கின்றாரோ, அப்படியான ஆறுதல் கடந்துவரும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சரீரத்தின் மாபெரும் தலையாக இருக்கின்றார் என்பதும், சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் அவரது மேற்பார்வை மற்றும் பராமரிப்பின்கீழ்க் காணப்படுகின்றனர் என்பதும் உங்களுக்கு ஞாபகமிருக்கும். உங்களது விரல் ஒன்றிற்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்த விரல் என்ன செய்யும்? பாதத்திடம்போய் உதவிகேட்குமா? இல்லை! மற்றக் கரமிடம் போய் உதவிகேட்குமா? இல்லை! சரி, அந்த விரல் என்னதான் செய்யும்? "எனக்குக் காயம் ஏற்பட்டுள்ளது" என்று அந்த விரலின் "புலனுணர்வு நரம்புகள்" மூளைக்குச் செய்தி அனுப்பி வைக்கின்றது. மூளையோ மற்றக் கரத்தை நோக்கி: "போய் அந்த விரலுக்கு உதவிசெய்" என்று செய்தி அனுப்பிவைக்கின்றது. இப்படியாகப் பார்க்கும்போது **கர்த்தரிடமே** நம்முடைய பிரச்சனைகளைக்குறித்துச் சொல்லவேண்டும்; உதவிக்காக நாம் அவரையே நோக்கிப்பார்க்கவேண்டும்; பின்னர் நமக்குத் தேவையானது எதுவோ, அதை எதிர்பார்த்திருக்கவேண்டும்; அது சரீரத்தினுடைய உடன் அங்கத்தினர்களிடமிருந்து வரலாம்; மேலும், அவருடைய நாமத்தில் நாம் ஒருவரையொருவர் ஆறுதல்செய்யவும், ஒருவருக்கொருவர் உதவிசெய்யவும்

தலையானவர் விரும்புகின்றார் என்பதை அறிந்தவர்களாக, இவ்விஷயத்தில் சரீரத்தின் உடன் அங்கத்தினர்களென நாம் அனைவருமே தலைக்குக் **கீழ்ப்படியும் மனநிலையில்** காணப்படவேண்டும்; இப்படி இருப்போமானால், நாம் ஒருவருக்கொருவர் நன்மைசெய்ய முயற்சிக்கின்றவர்களாகவும், ஒருவருக்கொருவர் ஊழியம்புரிய வரும் வாய்ப்புகளுக்காகத் தேடிப்பார்த்துக் கொண்டிருப்பவர்களாகவும் காணப்படுவோம். இதுவே மிகுந்த ஆசீர்வாதங்களையும், மிகுந்த சமாதானத்தையும், மிகுந்த சந்தோஷத்தையும் கண்டடைவதற்கான வழியாகும்; இன்னுமாக நம்முடைய சொந்தப் பாரங்களைச் சுமப்பதற்கும், மற்றவர்களுடைய பாரங்களைக் கூடுமானமட்டும் சுமப்பதற்கும், மற்றவர்களை ஆறுதல்செய்வதற்கும், மற்றவர்களுக்கு உதவிசெய்வதற்கும் நம்மால் முடிந்தமட்டும் பிரயாசப்படுகின்றவர்களாகக் காணப்படுவோம்.

- பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**09** **01,செப்டம்பர் 2024**

# கொட்டும் தேள்

தண்ணீரில் சிக்கி தவித்துக்கொண்டிருந்த தேள் ஒன்றினை, ஒரு மனுஷன் கண்டான். அம்மனுஷன் அதைக் காப்பாற்றலாம் என எண்ணி, தன் கையை நீட்டி அதைப் பிடிக்க முயன்றபோதோ, அந்தத் தேள் அவனைக் கொட்டியது. எனினும் அதைத் தண்ணீரினின்று காப்பாற்றும்படிக்கு அம்மனுஷன் தொடர்ந்து முயன்றுகொண்டிருந்தான்; தேளும் அவனை மீண்டும் மீண்டுமாகக் கொட்டிக்கொண்டே இருந்தது.

அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்த ஒருவர், திரும்பத்திரும்பக் கொட்டிக்கொண்டிருக்கும் தேளைக் காப்பாற்றாதே, நிறுத்து என்று அம்மனுஷனிடம் கூறினார். அதற்கு அந்த மனுஷனோ: "கொட்டுவது என்பது தேளினுடைய சுபாவம்; அன்புகாட்டுவது என்பது என்னுடைய சுபாவம். கொட்டுவது தேளினுடைய சுபாவமாகக் காணப்படுகின்றது என்பதற்காக, நான் ஏன் எனது சுபாவத்தைக் கைவிட வேண்டும்?" என்று வினவினான்.

**ஒருவேளை சுற்றியிருப்பவர்கள் உங்களைக் காயப்படுத்தினாலும் . . .**
**அன்புபாராட்டுவதை நிறுத்திக்கொள்ளாதிருங்கள் . . .**
**உங்கள் நற்குணங்களைக் கைவிடாதிருங்கள்!**

அன்புபாராட்டுவதைக் கைவிடவேண்டாம். உங்கள் இருதயத்தில் அன்பைப் பெற்றிருப்பீர்களானால், கொடுப்பதற்கென்று நீங்கள் எதையேனும், எப்போதும் பெற்றவர்களாகவே இருப்பீர்கள். அன்பை நீங்கள் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டாலும், இந்த அன்பு எனும் ஒரே பொக்கிஷமே குறைந்துபோகாமல், பெருகுகின்றதாய் இருக்கும். அன்பை நீங்கள் அள்ளி கொடுக்கக் கொடுக்க, இந்த அன்பென்னும், ஒரே பண்பே பெரிதாக வளருகின்றதாய் இருக்கும். அன்பென்னும் இந்த ஒரே வியாபாரத்தில்தான், அன்பை நீங்கள் ஊதாரித்தனமாகச் செலவு செய்யலாம். நீங்கள் அன்பைப் பகிர்ந்துகொள்ளலாம் . . . அதை அள்ளி அள்ளி வீசலாம் . . . அதை முற்றிலுமாகக் கொடுத்துவிடலாம் . . . அதை அமுக்கிக் குலுக்கிக் கொடுத்துவிடலாம் . . . அதை வாரி இறைத்திடலாம் . . . ஆனால் அது ஒருபோதும் தீர்ந்துபோகாது; மாறாக மேலும் மேலும் பெருகிக்கொண்டேயிருக்கும்.

- Devotions
Bible Student's Library

# மறுரூபமாக்கும் சத்தியங்கள்

[தமிழாக்க வெளியீடுகள்]

1. கிறிஸ்தவ திருமணம்
2. முறுமுறுப்பு
3. பாதங்கழுவுதல்
4. பெருமை
5. மன அழுத்தம்
6. குற்றங்கண்டுபிடித்தல்
7. ஜெபம்
8. மன்னிக்க முடியும்
9. ஆவியின் கனி

புதுச்சிருஷ்டிக்கான
சிந்தனை துளிகள்

2024 பிப்ரவரி - செப்டம்பர்

பிரதிகள் தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
8428737474; 9442221874